

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 82 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 14 – செவ்வாய்க்கிழமை 31 அக்டோபர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 82: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 14 - Tuesday 31 October 2023 - Dak 10 Pages ₹ 5.00


## வீரராகப் பிறந்து, வீரராக வாழ்ந்து, வீரராக மறைந்த

# தேவர் திருமகனாரின் புகழை என்றும் போற்றும் தி.மு.க.!

## பசும்பொன்னில் தேவர் திருமகனார் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க உரை!

**பசும்பொன், அக். 31 -**

**“வீரராகப் பிறந்து, வீரராக வாழ்ந்து, வீரராக மறைந்த தேவர் திருமகனாரின் புகழை என்றும் தி.மு.கழகம் போற்றும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன்னில் தேவர் திருமகனார் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தி உரையாற்றியபோது கூறினார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116–வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர்மாலை வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா மற்றும் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116 வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மலர்மாலை வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்திய பின்னர் ஆற்றிய உரை வருமாறு:-

இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி ஆறாண்டு காலம் சிறையில் இருந்தவர் பசும்பொன் திருமகனார் அவர்கள். அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் இன்று அவருக்கு நாங்கள் எல்லாம் வணக்கத்தை செலுத்தி இருக்கிறோம், அஞ்சலியை செலுத்தி இருக்கிறோம்.

“தேவர் திருமகன்” என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அவரை அன்போடு அழைக்கத் தொடங்கினார்கள்.

“எல்லாக் கட்சிகளும் ‘தலைவர் - தொண்டன்’ என்று வலம் வருகின்ற அந்த காலக்கட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ‘அண்ணன் - தம்பி’ என்கிற பாசத்தோடு எப்படி கட்சி நடத்துகிறீர்கள்?” என்று பசும்பொன் அவர்கள், நம்முடைய மதிப்பிற்குரிய எஸ்.எஸ்.தென்னரசு அவர்களிடத்திலே ஆச்சரியத்தோடு, மகிழ்ச்சியோடு, கேட்டிருக்கிறார்.

1963ஆம் ஆண்டு தேவர் அவர்கள் மறைவெய்திய நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் நேரடியாக இங்கு வருகை தந்து அவருக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள்.

1969ஆம் ஆண்டு பசும்பொன்னுக்கு வந்து அவருடைய நினைவிடத்தை பார்வையிட்டு அதற்குத் தேவையான அரசு உதவிகளைச் செய்தவர் தான் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

**நினைவிடத்திற்குத் தேவையான உதவிகள் செய்தவர் கலைஞர்!**

2007ஆம் ஆண்டு பசும்பொன் தேவர் திருமகன் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை மாபெரும் அரசு விழாவாக நடத்திப் பெருமை சேர்த்தவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

அப்போது, தேவர் நினைவிடத்தில் அணையா விளக்கை அமைத்து தந்ததும் தேவர் இல்லத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்ததும் 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூற்றாண்டு விழா வளைவு அமைத்ததும், 9 லட்சம் ரூபாய் செலவில் புகைப்படக் கண்காட்சி அமைத்துக் கொடுத்ததும், 4 இலட்சம் ரூபாயில் நூலகம், 5 இலட்சம் ரூபாயில் முடி இறக்கும் இடம், 5 இலட்சம் ரூபாயில் பால்குட மண்டபம், 5 இலட்சம் ரூபாயில் முளைப்பாரி மண்டபம் இப்படி எல்லாவற்றையும் அமைத்து கொடுத்தவர் தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

**தேவர் சிலை திறப்பு: முதல்வர் கலைஞர் ஏற்பாடு!**

தேவர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பசும்பொன் கிராமத்துக்கு மட்டும், மொத்தமாக 2 கோடியே 5 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகளை செய்து கொடுத்தவர் தான் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்!

அதுமட்டுமில்லாமல், மதுரையில் இன்றைக்கு கம்பீரமாக தேவர் சிலை அமைந்திருக்கிறது என்றால், மதிப்பிற்குரிய பி.கே.மூக்கையாத்தேவர் முயற்சியால் அமைக்கப்பட்ட அந்த சிலைத் திறப்பு விழாவை, தலைவர் கலைஞர் அவர்கள் அரசு விழாவாக நடத்தி, அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களை அழைத்து வந்து, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலேயே அந்த நிகழ்ச்சியை நடத்தினார்.

அதேபோல், மதுரை ஆண்டாள்புரம் பாலத்துக்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்று பெயர் சூட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் 25 லட்சம் ரூபாய் மதிப்பில் அறக்கட்டளை உருவாக்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்!

கழக ஆட்சி முதன்முதலாக உருவாகிய நேரத்தில், பல்வேறு சமூகங்களை சேர்ந்த பிரமுகர்கள், தங்களுடைய மக்களது கல்வி மேம்பாட்டிற்காக கல்லூரிகளை தொடங்குவதற்கு திட்டமிட்டார்கள். அவை எல்லாவற்றிற்கும் அனுமதி வழங்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

கமுதி, உசிலம்பட்டி, மேலநீலிதநல்லூர் ஆகிய இடங்களில் கல்லூரிகள் அமையக் காரணமாக இருந்தவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்!

இதில் மேலநீலிதநல்லூர் கல்லூரியை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து அதை கைப்பற்றி நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்ததும் 2021ஆம் ஆண்டு அதை மீட்டுக் கொடுத்திருக்கிறோம் என்பதும் வரலாறு.

அதேபோல இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட, தமிழக அரசின் சார்பில் நான் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

**நினைவிடத்தில் மண்டபங்கள்!**

தேவர் திருமகனார் நினைவிடத்தில், பொதுமக்கள் சிரமமின்றி அஞ்சலி செலுத்த அவர்களுக்கு வசதியாக 1.50 கோடி ரூபாய் செலவில் இரண்டு நிரந்தர மண்டபங்கள் அமைக்கப்படும் என்று நான் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறேன் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, 1989ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்தச் சமூக மக்கள் முன்னேற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவரும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

ஆகவே, தேவர் திருமகனார் அவர்கள் ‘வீரராக பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், அவருடைய மறைவுக்குப் பிறகும் வீரராகவே இன்றைக்கும் போற்றப்படுகிறார்’ என்று பசும்பொன் தேவர் பற்றி தலைவர் கலைஞர் இப்படியெல்லாம் பேசியிருக்கிறார். எனவே, அவருடைய சார்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அரசின் சார்பில், வாழ்க பசும்பொன் தேவர் பெருமகனார் புகழ்! என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ஆளுநர் மாளிகை பா.ஜ.க. அலுவலகமாக ஆகிவிட்டது!

## பசும்பொன்னில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**பசும்பொன், அக். 31 -**

**“தமிழ்நாடு ஆளுநர் மாளிகை பா.ஜ.க. அலுவலகமாக ஆகிவிட்டது வெட்கக் கேடான செயல்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பசும்பொன்னில் தேவர் திருமகனார் நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்திய பின் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டி வருமாறு:-

**செய்தியாளர்:** *இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்து...*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : அது தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கிறது. இது குறித்து அவ்வப்போது உடனடியாக ஒன்றிய அரசுக்கு கடிதம் அனுப்புகிறோம். வெளியுறவுத் துறை அமைச்சருடன் தொடர்பு கொள்கிறோம். பிரதமருக்கும் பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். அவ்வப்போது சில முயற்சிகளில் அவர்களை விடுவிக்கிறோம். அண்மையில் கூட இராமநாதபுர பகுதியைச் சார்ந்த மீனவர்கள் சிறைபிடிக்கப் பட்டிருக்கக்கூடிய செய்தி கிடைத்து அதிர்ச்சி அடைந்திருக்கிறோம். இந்த செய்தி கிடைத்தவுடனே, வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன். அவரை தொடர்பு கொள்ள இன்று காலையில் கூட நம்முடைய நாடாளுமன்ற குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களை புதுடெல்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். அவர் அங்கு சென்று இது குறித்து பேச சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்லாமல், இராமநாதபுரம் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர் சமுதாயத்தின் சில நிர்வாகிகளையும் போகச் சொல்லியிருக்கிறோம். அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்று இந்தப் பிரச்சினை குறித்து நேரடியாக சென்று பேச சொல்லியிருக்கிறோம்.**

**செய்தியாளர் :** *ஆரியம் திராவிடம் குறித்து சர்ச்சை உருவாக்கப் படுகிறதே?*

**மு.க.ஸ்டாலின்: “இன்னார்க்கு மட்டுமே இது” என்று சொல்வது ஆரியம். ‘எல்லார்க்கும் எல்லாம் உண்டு” என்று சொல்வது திராவிடம். இந்த வித்தியாசத்தை, இந்த உண்மையை தயவுசெய்து நம்முடைய ஆளுநர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.**

**செய்தியாளர் :** *மதுரை விமான நிலையத்திற்கு தேவர் பெயரை வைக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து...*

**மு.க.ஸ்டாலின் : ஏற்கனவே இது குறித்து, ஒன்றிய அரசிடம் சொல்லியிருக்கிறோம். பார்ப்போம்.**

**செய்தியாளர் :** *ஆளுநர் மாளிகையில் பாட்டில் குண்டு வீசப் பட்டுள்ளது குறித்து...*

**மு.க.ஸ்டாலின் : ஆளுநர் மாளிகையில் பெட்ரோல் குண்டு வீசப்படவில்லை. மாளிகைக்கு வெளியில் தெருவில் வீசப் பட்டிருக்கிறது. அதனுடைய CCTV காட்சிகள் எல்லாம் காவல்துறை அதிகாரிகள் பத்திரிகை நிருபர்களை அழைத்து வெட்ட வெளிச்சமாக காண்பித்திருக்கிறார்கள். ஆளுநர் மாளிகையிலிருந்து திட்டமிட்டு இந்தப் பொய் பரப்பப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆளுநர் இன்றைக்கு பி.ஜே.பி. கட்சியாக மாறியிருக்கிறார். ஆளுநர் மாளிகையும் பி.ஜே.பி. கட்சியின் அலுவலகமாக மாறியிருக்கிறது. அதுதான் வெட்கக்கேடு.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (6)

## நவம்பர் 3 வெள்ளிக்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “ முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, நவம்பர் 3 வெள்ளிக்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், “ கவிஞர்களின் உரை நடையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 31-10-2023

# பொய்ப் பிரமாணம் எடுத்துள்ள ஆளுநர் 2

★ **பொய் 9:** ராஜ்பவன் காவலர்கள்தான் ஆபத்து ஏற்படாமல் தடுத்தனர்.

**உண்மை:** இவர்கள் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல. ஆளுநர் மாளிகைபாதுகாப்புக்காகசர்தார்படேல்சாலையில்பணியில்இருந்தவர்கள் சென்னை பெருநகர காவல்துறையின் பாதுகாப்புக் காவலர்கள்தான். வினோத்தை கைது செய்தவர்கள் தமிழ்நாடு காவல்துறை போலீஸார்தான்.

★ **பொய் 10:** ஆளுநர் மீதான தாக்குதல் போன்ற அனைத்து வழக்குகளிலும் காவல் துறை உண்மையான வழக்குப் பதிவு செய்யவில்லை, சாதாரண சிறிய குற்றங்களாக போலீஸ் மாற்றியது.

**உண்மை:** J3 Guindy PS Cr. no 735/2023 u/s 436, 353,506(ii) IPC Act 3 of Explosive Substances Act and 4 of TNPPDL Act - ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது.

★ **பொய் 11:** ஆளுநர் மாளிகை நுழைவில் உள்ள நபர்கள் அவரை மடக்கி பிடித்ததாக ஆளுநர் மாளிகை புகாரில் உள்ளது.

**உண்மை:** அதுபோன்ற ஒன்று எங்கும் நடைபெறவில்லை. காவல் துறை சார்பில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஐந்து காவலர்கள் மட்டுமே அதை தடுத்து அவர்களிடம் இருந்து பெட்ரோல் பாட்டிலை பிடுங்கி உள்ளனர். உடனடியாக ரோந்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கிருந்து அப்புறப்படுத்தி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

★ **பொய் 12:** ஆளுநருக்கு வரும் கடுமையான அச்சுறுத்தலை காவல்துறை அலட்சியப்படுத்தியது.

**உண்மை:** ஆளுநர் மாளிகை என்பது மிகமிக பாதுகாப்பான இடம். 253 காவலர்கள், ஆளுநர் மாளிகைக்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள். கூடவே மோப்ப நாய் படை, வெடிகுண்டு நிபுணர்குழு, பேக்கேஜ் ஸ்கேனர் ஆகியவை உள்ளன. ஆளுநர் மாளிகைக்கு இரண்டடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. உள்பகுதியில் மத்திய பாதுகாப்புப் படையினரும், வெளிப்பகுதியில் தமிழக காவல் துறையினரும் பாதுகாப்புப் பணியில் உள்ளனர். ஆளுநர் வெளியில் செல்லும் இடங்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இவ்வளவு பாதுகாப்பு வேறு எங்கும் இல்லை.

- ஒரு சம்பவத்தில் எத்தனை பொய் சொல்கிறார் ஆளுநர் என்பதை இதன் மூலம் அறியலாம். ராஜ்பவனை FAKE பவன் ஆக்கிவிட்டார் ஆளுநர் ரவி.

“ஆளுநர் மாளிகை மீது இன்று பிற்பகலில் தாக்குதல் நடத்தப்பட்டது. வெடிகுண்டுகள் ஏந்திய விஷமிகள் பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைய முயன்றனர். எனினும் உஷாராக இருந்த காவலர்கள் தடுத்ததால், இரண்டு பெட்ரோல் குண்டுகளை ராஜ்பவனுக்குள் வீசிவிட்டு தாக்குதல் நடத்தியவர்கள் தப்பினர்” - என்று 25.10.2023 இரவு 9.27 மணிக்கு ராஜ்பவன் செய்திக் குறிப்பு கூறுகிறது.

**வெடிகுண்டுகள் ஏந்திய விஷமிகள் வரவுமில்லை. அவர்கள் பிரதான வாயில் வழியாக நுழைய முயற்சிக்கவுமில்லை. அவர்கள் பெட்ரோல் குண்டுகளை ராஜ்பவனுக்குள் வீசவும் இல்லை. அவர்கள் தப்பவும் இல்லை. மூன்று வரியில் மொத்தமும் பொய். சம்பவம் நடந்த மதியம் 3 மணிக்கே வினோத் கைது செய்யப்பட்டு விட்டார். ஆனால் இரவு 9.27 மணிக்கு ராஜ்பவன் சொல்கிறது, தாக்குதல் நடத்தியவர்கள் தப்பி விட்டார்கள் என்று. இதனை விட பொய் மூட்டை இருக்க முடியுமா?**

26.10.2023 மதியம் 3.20 மணிக்கு ராஜ்பவன் ஒரு செய்திக் குறிப்பு வெளியிடுகிறது. “ராஜ்பவனின் தாக்குதல் குறித்த புகாரை காவல் துறை பதிவு செய்யவில்லை. தன்னிலையாக பதிவு செய்யப்பட்ட புகார், தாக்குதலை சாதாரண நாசகார செயலாக நீர்த்துப் போகச் செய்து விட்டது. அவசர கதியில் கைது மேற்கொள்ளப்பட்டு மாஸ்திரேட்டை நள்ளிரவில் எழுப்பி குற்றம் சாட்டப்பட்டவர் சிறையில் அடைக்கப்பட்டு விட்டதால் பின்னணியில் உள்ளவர்களை அம்பலப்படுத்தக் கூடிய விரிவான விசாரணை தவிர்க்கப்பட்டுள்ளது. நியாயமான விசாரணை தொடங்கும் முன்பே கொல்லப்படுகிறது” என்கிறது அந்த செய்திக் குறிப்பு. ஏதோ மர்ம சினிமாவைப் போல கதை எழுதுபவர்கள் ராஜ்பவனுக்குள் புகுந்து விட்டார்கள் போல. பி.டி.சாமி கதை மிஞ்சுவதாக இருக்கிறது மர்ம விவரிப்புகள் இருக்கிறது.

‘தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிவிட்டார்கள்’ என்று முதல் நாள் அறிக்கை விட்டதும் ராஜ்பவன்தான். ‘அவசர கதியில் கைது செய்துவிட்டார்கள்’ என்பதும் ராஜ்பவன்தான். ஒருவரை அவசரமாகத்தான் கைது செய்ய முடியும். ஆர அமர கைது செய்ய முடியாது.

25 ஆம் தேதி மதியம் சம்பவம் நடந்துள்ளது. ஆளை சம்பவ இடத்திலேயே கைது செய்து விட்டது காவல் துறை. வழக்கு பதிந்து மாஜிஸ்திரேட்டிடம் அழைத்துச் சென்று ஆஜர் படுத்தி சிறைக்கு அனுப்பும் அனைத்து நடைமுறைகளும் நடந்து விட்டது. அதன்பிறகுதான் 25 ஆம் தேதி இரவு 9.30 மணிக்கு ஆளுநர் மாளிகையில் இருந்து புகாரே அனுப்புகிறார்கள். அதாவது அனைத்து முதல் கட்ட விசாரணையும் முடித்த பிறகு புகார் அனுப்புகிறார்கள். எவ்வளவு வேகம் இந்த மாஜி ஐ.பி.எஸ். அதிகாரியிடம்?!

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கோவையில் ஒரு சம்பவம் நடந்தது. அதிலும் இப்படித்தான் தனது குதர்க்க விளையாட்டை ஆளுநர் செய்தார்.

‘கோவை வழக்கை என்.ஐ.ஏ.வுக்கு வழங்கியதில் ஏன் இந்த காலதாமதம் என்பதுதான் என்னுடைய கேள்வி’ என்று பொத்தாம் பொதுவாக பேசினார். ஒரு தனியார் நிறுவனம், தனது யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியின் தங்கும் விடுதியை திறந்து வைப்பதற்காக இவரை அழைத்திருக்கிறது. அந்த இடத்தில் போய் இப்படி பேசினார். 2022 அக்டோபர் 23 அன்று காலையில் சம்பவம் நடந்துள்ளது. அக்டோபர் 26 அன்று காலையில் தேசிய புலனாய்வு முகமைக்கு வழக்கு மாற்றப்பட்டது. அதாவது மூன்றாவது நாளே மாற்றப்பட்டு விட்டது. இதனை பெரிய குறையைப் போல அன்று சொல்லி சர்ச்சை கிளப்பினார் ஆளுநர்.

மற்ற மாநிலங்களில் இதுபோல நடந்த சம்பவங்களை எல்லாம் மூன்று, நான்கு மாதங்கள் கழித்து என்.ஐ.ஏ.விடம் ஒப்படைத்துள்ளார்கள். ஆனால் இங்கே மூன்றாவது நாளே ஒப்படைத்தது அரசு. அதையே பெரிய தாமதம் போல பிரச்சாரம் செய்தார். அதாவது அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதை தனது தொழிலாக வைத்துள்ளார் ஆர்.என்.ரவி.

**அமைதியான மாநிலமாக இருக்கிறதே - இந்த அமைதியைக் குலைக்க முடியவில்லையே என்று பா.ஜ.க. கும்பல் நினைப்பதைப் போலவே ஆளுநரும் நினைப்பது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. அண்ணாமலை இடத்தை பிடிக்க ஆளுநர் ரவி போட்டி போடுவதாகவே இவை நமக்கு உணர்த்துகின்றன.**

●●



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் 190 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி மற்றும் மதுரை தொண்டி சாலையில் அப்பல்லோ சந்திப்பில் 150 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாலம் மற்றும் வட்ட வடிவ சந்திப்பு அமைக்கும் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோரிப்பாளையம் மற்றும் தொண்டி சாலையில்

# மதுரையில் ரூ.340.68 கோடியில் 2 இடங்களில் கட்டுமானப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**மதுரை, அக். 31-**

**கோரிப்பாளையம் சந்திப்பில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டில் மேம்பால கட்டுமானப் பணி மற்றும் மதுரை தொண்டி சாலையில் ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் அப்பல்லோ சந்திப்பில் சாலை மேம்பாலம் மற்றும் வட்ட வடிவ சந்திப்பு அமைக்கும் கட்டுமானப் பணி என இரண்டு இடங்களில் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் 190 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணி மற்றும் மதுரை தொண்டி சாலையில் அப்பல்லோ சந்திப்பில் 150 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாலம் மற்றும் வட்ட வடிவ சந்திப்பு அமைக்கும் கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

**கோரிப்பாளையம் மேம்பாலம் கட்டும் பணி!**

மதுரை வைகை ஆற்றின் தென்புறம் மீனாட்சி அம்மன் கோவில் இரயில்வே நிலையம், பெரியார் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகங்கள் அமைந்துள்ளன. வைகை ஆற்றின் வடபுறம் இராஜாஜி மருத்துவமனை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், மதுரை மாநகராட்சி அலுவலகம், காவல் ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியன அமைந்துள்ளன. நகரின் தென் பகுதியிலிருந்து வடபகுதியில் அமைந்துள்ள அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு இச்சந்திப்பின் வழியாக போக்குவரத்து நடைபெறுவதால் இங்கு கடும்போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலை குறைத்திட கோரிப்பாளையம் சந்திப்பு உட்பட பல்வேறு இடங்களில் மேம்பாலம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரையில் 21.1.2022 அன்று நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்திருந்தார்.

அதன்படி, மதுரை இராஜாஜி மருத்துவமனை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டும் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.5.2022 அன்று சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலைத்துறையின் 75வது ஆண்டு விழாவில் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, கோரிப்பாளையம் சந்திப்பில் 190.40 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோரிப்பாளையம் சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக 61 தூண்கள் மற்றும் 62 கண்களுடன் மொத்தம் 2 கி.மீ நீளத்திற்கு மேம்பாலம் அமையவுள்ளது. இப்பாலத்தின் ஏறுதளம் தமுக்கம் பகுதியில் தொடங்கி கோரிப்பாளையம் சந்திப்பு மற்றும் வைகை ஆற்றில் ஆல்பார்ட் விக்டர் பாலத்திற்கு அருகில் இணையாக புதிதாக கட்டப்படும் பாலம் வழியாக 1.300 கி.மீ நீளத்திற்கு 12 மீட்டர் அகலத்துடன் ஒருதிசை வழித்தட மேம்பாலமாகச் சென்று நெல்பேட்டை அண்ணா சிலை சந்திப்பில் இறங்கும் வகையில் கட்டப்படவுள்ளது. மேலும், கோரிப்பாளையம் சந்திப்பில் பாலத்திலிருந்து செல்லூர் நோக்கி செல்ல கூடுதலாக 700 மீட்டர் நீளத்திற்கு இறங்குதளம் 8.50 மீட்டர் அகலத்துடன் அமையவுள்ளது.

மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பக்கவாட்டின் இருபுறமும் அணுகுசாலை அமைக்கப்படுவதுடன், பாதசாரிகள் நடந்து செல்ல நடைமேடையுடன் கூடிய மழைநீர் வடிகால், பேருந்து நிறுத்த வசதிகள் ஆகியன அமைக்கப்படவுள்ளன. மேலும்,

பீபீ குளம் காந்தி அருங்காட்சியகம் சாலை சந்திப்பில் அவசர காலங்களில் ஆம்புலன்ஸ் செல்வதற்காக ஒரு வாகன சுரங்கப்பாதை (Vehicle Under Pass) அமைக்கபடவுள்ளது.

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும்பொழுது கோரிப்பாளையம் சந்திப்பில் பொதுமக்கள் போக்குவரத்து நெரிசலின்றி பயணிக்க இயலும்.

**மதுரை தொண்டி சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி!**

மதுரை - தொண்டி சாலை (SH 33) மதுரை மாவட்டத்தில் உள்ள முக்கியமான மாநில நெடுஞ்சாலையாகும். இச்சாலையானது மதுரை மாநகரிலிருந்து சிவகங்கை செல்வதற்கும் மதுரை வட்டச்சாலையை அணுகுவதற்கும் பயன்படுவதால் அப்பல்லோ சந்திப்பில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மதுரை மாநகருக்குள் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பல்வேறு இடங்களில் சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 21.1.2022 அன்று மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் அறிவித்தார்.

அதன்படி மதுரை - தொண்டி சாலையில் உள்ள அப்பல்லோ சந்திப்பில் சாலை மேம்பாலம் ஒன்று அமைப்பதற்கும், மிகவும் நெரிசல் மிகுந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆவின் மற்றும் அப்பல்லோ சந்திப்பு ஆகிய இடங்களில் போக்குவரத்து சிக்னலை அப்புறப்படுத்தி அப்பகுதியினை அகலப்படுத்தி வட்ட வடிவ சந்திப்பு (Roundabout) அமைப்பதற்கும் 150.28 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த மேம்பாலம் 30 தூண்களுடன் மொத்தம் 1100 மீட்டர் நீளத்திற்கு அமைகக்கப்படவுள்ளது. அதில் நான்கு வழித்தட பாலத்தின் அகலம் 17.2 மீட்டர் ஆகும். மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பக்கவாட்டின் இருபுறமும் இருவழித்தட சேவை சாலையாக விரிவாக்கம் மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் ஆகியன அமைக்கப்படவுள்ளன.

இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும்பொழுது பொதுமக்கள் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசலின்றி பயணிக்க இயலும்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி வி. இந்திராணி பொன் வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி

# வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்திக்கிறார் டி.ஆர்.பாலு!

## இலங்கை ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் மீனவர்களின் குடும்பத்தார் உடன் செல்கின்றனர்!

சென்னை, அக். 31-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை இன்று சந்திக்கிறார் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள்.

இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவிக்க வேண்டும் என்று அந்தச் சந்திப்பின் போது டி.ஆர்.பாலு வலியுறுத்த உள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சரை சந்திக்கச் செல்லும்போது, கைதான மீனவர்களின் குடும்பத்தினரையும் புதுடெல்லிக்கு உடன் அழைத்துச் செல்கிறார் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. இதற்காக ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்திக்க நேரம் கேட்டுள்ளதாகவும் டி.ஆர். பாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி, பிடிபட்ட 37 ராமேஸ்வரம் மீனவர்களையும், 5 படகுகளையும் உடனே விடுவிக்க கேட்டுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாட்டின் விரைவான முன்னேற்றத்திற்காக

# தொலைநோக்குடன் சிறந்த திட்டங்களைத் தீட்டி வருகிறார் முதல்வர்!

## மும்பையில் முதலீட்டாளர் மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

மும்பை, அக்.31-

மும்பையில் நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பில் (TNGIM) 2024 - வணிகத் தலைவர்கள், முதலீட்டாளர்கள், வர்த்தக பிரதிநிதிகளுடன் தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆற்றிய உரையின்போது தமிழ்நாடு நல்ல ஒரு திறமையான தலைமை மற்றும் நிர்வாகத்தால் முன்னிலை பெற்று வருகிறது. இந்த மாநிலத்தில் தான் மிகவும் திறமையான மனித வளங்கள் மற்றும் கொள்கைகளில் வேரூன்றிய நிர்வாக கட்டமைப்பு உள்ளது என்றார்.

மேலும் தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சி மற்றும் பன்முகத்தன்மையை எடுத்துரைத்த அவர், “ஆட்டோமொபைல், மின்சார வாகனங்கள், உலகளாவிய திறன் மையங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உதிரி பாகங்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் எல்லாம் நாங்கள் முன்னணியில் இருக்கிறோம்.

முதலமைச்சர் அவர்களின் நிர்வாக திறமையால் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார என்ற இலக்கை நோக்கி தமிழ்நாடு விரைவான முன்னேற்றத்தை அடைய இருக்கிறது’ என அமைச்சர் மேற்கோள் காட்டினார்.

“வரும் 2024 ஜனவரி 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கும் தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டின் வாயிலாக மாநிலத்தின் பலம் மற்றும் வளர்ச்சித் திறனை வெளிப்படுத்த சிறந்த ஒரு தளமாக விளங்குகிறது” என்று அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறினார்.




மும்பையில் நடைபெற்ற உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பில் (டி.என்.ஜி.ஐ.எம்.) 2024– வணிகத் தகவல்கள் முதலீட்டாளர்கள், மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உரையாற்றினார்.

### இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!



**சென்னை, அக்.31–**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்களையும் அவர்களது 5 மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள், IND TN10MM985, INDTN10MM915, INDTN10MM717, INDTN10MM917 மற்றும் INDTN10MM972 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடி படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 28.10.2023 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மட்டுமே வாழ்வாதாரமாக கொண்டுள்ளதாகவும், குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இவ்வாறான தொடர்ச்சியான கைதுகள் மீனவ சமூகத்தினரிடையே மிகுந்த மன உளைச்சலையும், வேதனையையும் ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய செயல்கள் தமிழ்நாட்டின் மீனவ சமுதாயத்தினரிடையே மன அழுத்தத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது கோரிக்கைகள் ஏற்கப்படாமல் போவதாக உணர்கிறார்கள் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நம் மீனவர்களின் உரிமைகளுக்காக ஒன்றிய அரசு மேலும் வலுவாகக் குரல் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் தாம் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். பாக் வளைகுடா பகுதியில் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை தாம் மீண்டும் வலியுறுத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2023 அக்டோபர் மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது தடையின்றி தொடர்வதாக வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைத்திடும் வகையில், இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக உரிய நிலையான தூதரக வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### திருநெல்வேலி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 31–

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அயன்சிங்கம்பட்டி கிராமம், மடத்துத் தெரு பகுதியைச் சேர்ந்தபேச்சிமுத்து (வயது 55) மற்றும் பேரின்பராஜா ஆகிய இருவரும் 28.10. 2023 அன்று இரவு ஜமீன்சிங்கப்பட்டியிலுள்ள தங்களது வயலுக்கு நீர் பாய்ச்ச வாய்க்காலில் இறங்கி மடையைத் திறக்க முயன்ற போது எதிர்பாராதவிதமாக விலங்குகள் வருவதை தடுப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த மின்சார வலையில் சிக்கி மின்சாரம் தாக்கி இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### ஒகேனக்கல்லில் நீர்வரத்து 4 ஆயிரம் கனஅடியாக சரிவு!

*பென்னாகரம், அக்.31–*

*கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது.தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் ஒகேனக்கல்லில் கடந்த 9 தினங்களாக நீர்வரத்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று காலை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து மேலும் சரிந்து 4 ஆயிரம் கனஅடியாக குறைந்து வந்து கொண்டிருக்கிறது.*

---

### கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

# ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## அமைச்சர் கே.என்.நேரு தகவல்!



*நாமக்கல், அக். 31–*

*நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.*

*வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையை திறந்து வைத்து தெரிவித்ததாவது,*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நாமக்கல் மாவட்டத்தில் கடந்த மாதம் ரூ.854.37 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் நாமக்கல் பேருந்து நிலையம், புதிய மார்க்கெட் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு ரூ.1,600 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். நகரப் பகுதிகளில் பேருந்து நிலையம், குடிநீர் வசதி, சந்தை உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிட நகராட்சி நிர்வாகத் துறைக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.24 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் அலுவலர்களுக்கான ஊதியம் போக ரூ.18 ஆயிரம் கோடி மக்கள் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காகவே செலவிடப்படுகிறது.*

*தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்படுகின்ற துறை சார்ந்த அறிவிப்புகள் 3 மாத காலத்திற்குள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் அடிப்படை யில் உடனடியாக அரசாணைகள் வெளிடப்பட்டு அதற்கான நிதி ஒப்பளிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.*

*நகரப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகளை நிறைவேற்றிட கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 490 நகராட்சிகள், 138 பேரூராட்சிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*குமாரபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.278.24 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த தினசரி சந்தை 2,188 சதுர மீட்டர் பரப்பளவில் 6 நிரந்தர கடைகளும், 155 தற்காலிக கடைகளும், 1 சிற்றுண்டியகம், 1 பெண்கள் ஒய்வறை, 1 கிடங்கு, 1 பாது காவலர் அறை மற்றும் 2 கழிப்பறை உட்பட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.*

*குமாரபாளையம் நகராட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப் பேற்றவுடன் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.245,20 இலட்சம் மதிப்பீட்டில் 23 எண்ணிக்கை 1.83 கி.மீ. மண் சாலையினை தார் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி, ரூ.192.00 இலட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம் கட்டும் பணி, ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.*

*கலைஞர் நகர்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.738.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி, ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வாரச்சந்தை கட்டும் பணி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்புரம்) 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1630.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 எம்எல்டி, கழிவுநீர் 20 கே.எல்.டி கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேலும் குமாரபாளையம் நகராட்சிக்கு தேவையான அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் நிறைவேற்றப்படும் என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் குமாரபாளையம் நகர மன்றத் தலைவரும், நகர வடக்கு திமுக செயலாளருமான த.விஜய்கண்ணன், துணை தலைவர் கோ.வெங்கடேசன், 14 வது வார்டு உறுப்பினர் வி.தீபா, நகராட்சி நிர்வாக சேலம் மண்டல இயக்குநர் இரா. பூங்கொடி அருமைக்கண், குமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் ஆ.சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

---

### வண்டலூர் உயிரியல் பூங்காவில் விலங்குகளுக்கு கூடுதல் பழங்கள்!

*சென்னை, அக்.31–*

*சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஏராளமான விலங்குகள், பறவைகள் உள்ளன. தற்போதைய நிலவரப்படி அங்கு 172 இனங்களைச் சேர்ந்த 2,368 உயிரினங்கள் உள்ளன. இங்குள்ள பெரும்பாலான விலங்குகளுக்கு பழங்கள் உணவாக வழங்கப்படுகின்றன.*

*இந்நிலையில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளுக்கு உணவாக கூடுதலாக பழங்கள் வழங்கப்பட உள்ளது.*

*இதுகுறித்து வண்டலூர் உயிரியல் பூங்கா அதிகாரிகள் கூறியதாவது:- வண்டலூர் உயிரியல் பூங்காவில் விலங்குகளுக்கு பழங்களை உணவளிப்பதற்காக தனியாக பழத்தோட்டம் உள்ளது. விலங்குகளுக்கு கூடுதல் பழங்களை உணவாக வழங்குவதற்காக பழத்தோட்டத்தில் அதிகமாக பழ மரங்கள் நடப்பட உள்ளன என்றார்.*

---




நாகை மாவட்டம் திருக்குவளை அண்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். உடன் கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி, அண்ணா பல்கலைக் கழக துணை வேந்தர் ரா.வேல்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, திருக்குவளை பொறியியல் கல்லூரி முதல்வர் இளங்கோவன் மற்றும் பலர் உள்ளனர்.

---

### 13 மொழிகளில் பரவி வரும்

# பண்புடைத் தலைவரின் நேர்காணல் !



“ஈ டிவி பாரத் “ செய்தித் தளத்திற்கு நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.10.2023 அன்று வழங்கியுள்ள நேர்காணல், இந்திய தேசிய இனங்களின் 12 மொழிகளிலும், ஆங்கிலத்திலும் வெளியாகி, தெற்கிலும் – வடக்கிலும், கிழக்கிலும் – மேற்கிலும், திராவிட இயக்கத் தலைவரின் தெளிவான கருத்துகள் பரவி, பரவலான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

‘ஈ டிவி பாரத்’ என்ற காணொலி செய்திச் செயலி (video news app) ராமோஜி குழுமத்தைச் சேர்ந்தது. இது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் – 12 இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில், எல்லா நாட்களிலும், எல்லா நேரமும் ( 24 × 7 ) செய்திகளைக் கொண்டு செல்லும் புகழ் பெற்ற நிறுவனம் ஆகும்.

**நமது கழகத் தலைவர், அந்த செய்தி நிறுவனத்திற்கு வழங்கியிருக்கும் நேர்காணலில், திராவிட மாடல் அரசின் செயல் திட்டங்களில் தொடங்கி, மத வாதம் - மத நல்லிணக்கம், வெறுப்பு அரசியல் - பன்முகத் தன்மை, தேசிய அரசியலில் தி.மு.க.வின் பங்களிப்பு, டிஜிட்டல் மற்றும் சோஷியல் மீடியாக்களில் பா.ஜ.க.வின் பொய்ப் பரப்புரைகள், இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்று பல்வேறு கருத்து விளக்கங்களைத் தெளிவு படுத்தி உள்ளார். மேலும், “மு.க.ஸ்டாலினுக்கும் தன் உயரம் நன்றாகத் தெரியும்” என்ற தனது எண்ணத்தையும் வெளிப்படுத்தி, சில ஊகங்களுக்கும் முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.**

13 மொழிகளில் வெளியாகி இருக்கும் கழகத் தலைவரின் நேர்காணல், ஒரு தனிமனிதக் குரலாக அல்லாமல், பவள விழா காணும் மாபெரும் மக்கள் இயக்கத்தின் குரலாக – தென் திசையின் நிரந்தர தீபமாம் திராவிடத்தின் குரலாக, செவிமடுத்துத் தீவிரமாகக் கேட்கப்படுகிறது. நமது இயக்கத்தைத் தொடர்ந்து பார்த்துப் பழகி வருவோர்க்கு, தலைவரின் இந்த நேர் காணலையும், இது 13 மொழிகளில் வெளியாகி உள்ளதையும், அதனால் ஏற்பட்டிருக்கும் தாக்கத்தையும், சாதாரணமாகக் கடந்து போய்விட முடியாது.

நமது இயக்கத்தின் வளர்ச்சியில், தொடக்க காலத்தில் ஒரு கட்டம் இருந்தது. அப்போதெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களின் நீண்ட எழுச்சி உரைகளை, சில ஏடுகள் அப்படியே வெளியிடத் தயங்கின. கூட்டத்தில் “ அண்ணாதுரையும் பேசினார் ( Annadurai also spoke ) “ என்றுதான் ஒருவரிச் செய்தியாக வெளியிட்டன. கலைஞரும், நாவலரும், பேராசிரியரும் என மற்ற முன்னணியினரின் உரை எதுவும் – பல்லாயிரவர் கூடிய பொதுக் கூட்டங்களில் அந்த உரைகள் நிகழ்த்தப் பட்டாலும் – ஏடுகள் வெளியிட முன்வர வில்லை. அந்த அளவுக்கு ஒவ்வாமையும், வெறுப்பும் உச்சி மீதேறி உட்கார்ந்திருந்த காலகட்டம் அது.




“ சில பத்திரிகை அதிபர்கள், ஆதிக்கபுரியினர் பார்வையில் கெட்ட வார்த்தையாகப்பட்ட பெயர் கருணாநிதி என்பது!” என்று கலைஞர் அவர்களே எழுதியிருக்கிறார்.

**தமிழ்நாடு சட்டப் பேரவையில், 15 என்பது 50 என்று பெருகியதற்குப் பிறகும், ‘இவை கண்ணீர்த் துளிகள் தானே, விரைந்து காய்ந்து வற்றிப் போகும்’ என்று பத்திரிகைகள் சில, பகற்கனவில் செயற்கைப் பரவசம் கொண்டன. தமிழ்நாட்டுக்குள்ளேயே இப்படி இருந்தது என்றால், இந்திய அளவில் குறிப்பாக, வட இந்தியாவில் நமது கட்சி தொடர்பான அணுகுமுறை அப்போதெல்லாம் எப்படி இருந்திருக்கும் என்று விளக்கிடத் தேவை இல்லை.**

1962ல் அண்ணா அவர்கள் மாநிலங்களவை உறுப்பினராகி, தனது கன்னிப் பேச்சில் (1962, ஏப்ரல்) , கற்றோரைக் கவர்ந்தீர்க்கும் ஆங்கிலத்தில், “I consider that the Dravidians have got something concrete, something distinct, something different to offer to the Nation at large.Therefore it is that we want self determination” என்று பிரகடனம் செய்ததற்குப் பிறகு, வட இந்திய அரசியல் மற்றும் பத்திரிகை உலகம், அண்ணாவையும் , கழகத்தையும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியது.

‘The Illustrated weekly of India’ என்ற ஆங்கிலத்தில் அகில இந்திய அளவில் புகழ் பெற்ற இதழின் ஆசிரியர் ஏ.எஸ்.ராமன், அறிஞர் அண்ணா அவர்களுடன் நேர் காணல் நடத்தினார். அது 19.9.1965 அன்று அந்த இதழில் வெளியானது. 1965ல் தமிழ்நாடு மாணவர்களின் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் – கலைஞர் உள்ளிட்டோர் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ( Defence of India Rules ) கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டதால், கழகத்தின் மேல் அகில இந்தியக் கவனம் கெட்டிப் பட்டது. அதன் விளைவாகவே, ஏ.எஸ். ராமன், அறிஞர் அண்ணா அவர்களுடன் நேர் காணல் நடத்தினார்.

அந்த நேர்காணலில், “நாங்கள் பிராமணீயத்தை எதிர்க்கிறோம், பிராமணர்களை அல்ல ; கழகத்தில் இணைந்து கொள்ள ராஜாஜி வருவாரானால், கழகத்திற்கு அது உயர்வான பெருநாளாகும் ( Great Day ) ;” என்றும்; இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கான ஆறு காரணங்களாக, “ First, Hindi in the context of South India is untenable, Secondly, it represents the tyranny of the majority, Thirdly, it will reduce the South Indians to the status of secondclass citizens,” என்று அடுக்கடுக்காக அண்ணா எடுத்துரைத்ததும்; அகில இந்திய அளவில் பரபரப்பை உருவாக்கிற்று.

**அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு; The Hindu, The Mail, Hindustan Times, Amirdha Bazaar Patrika, Statesman, The Indian Express,போன்ற ஆங்கில நாளேடுகள் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, கழகத்துடனும், கலைஞருடனும், நல்லெண்ண அடிப்படையிலான தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள ஆரம்பித்தன. கலைஞர் - பத்திரிகையாளர் நேர் காணல்கள் சொற்சுவை, பொருட் சுவை, நகைச்சுவை நிரம்பி சுவாரசியமானவை. கழகத்தின் சார்பில் பத்திரிகைத் தொடர்புகளை ஒருங்கிணைத்து, உயர்த்துவதற்குப் பெரு முயற்சி மேற்கொண்டவர் மறைந்த முரசொலி மாறன் அவர்கள் ஆவார்.**

வெகு மக்கள் ஆதரவுடன் கழகம், நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு, அகில இந்திய அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கி, அகில இந்தியக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, வெற்றி பெற்று, ஒன்றிய அமைச்சரவையில் பங்குபெற ஆரம்பித்தது முதல், பத்திரிகைகள் – ஊடகங்கள் ஆகியவற்றுடனான நல்லெண்ணத் தொடர்பும், ஆக்கபூர்வமான உறவும், வலுவடைந்து வளர்ந்து வருகின்றது.

அத்தகைய வளர்ச்சியின் அடையாளம்தான், ‘ஈ டிவி பாரத்’, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நடத்திய நேர் காணலும், அந்த நேர் காணலை 13 மொழிகளில் விரிவாக வெளியிட்டுள்ள பாங்கும் ஆகும். **அறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் பத்திரிகைகளுடனான உறவை, கருத்துச் சுதந்திர கவனத்துடன், பேணிப் பாதுகாத்து வந்ததை சிறு வயது முதற்கொண்டு நேரில் கண்டு, பயிற்சி கொண்டவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் அதை மேலும் செம்மைப் படுத்தி, இயக்கத்தின் நலனுக்கும், தமிழ் நாட்டின் பண்பு குறையா மேம்பாட்டுக்கும் வழி வகுத்து வருகிறார் என்பது கண்கூடு !**

**: கி.இராஜமாணிக்கம் :**

●●●



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, வெள்ளையம்மாள்புரம் ஊராட்சி, அருங்குளம் ஊராட்சி, நமச்சிவாயபுரம் ஊராட்சி, சக்கம்மாள்புரம் ஊராட்சி, சிவஞானபுரம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மக்கள் களம் மக்களின் குறை கேட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விவசாயிகளுக்கு இடுபொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார். உடன் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதாஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றியச் செயலாளர் அன்புராஜன், ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இராதாபுரம் தொகுதி வள்ளியூர் நேரு நர்சிங் கல்லூரியில் மாநில அளவிலான கல்லூரி மற்றும் பள்ளி மாணவ – மாணவியருக்கான பேச்சுப்போட்டி,கட்டுரை போட்டி நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் கழக செய்தி தொடர்பு மாநில இணைச்செயலாளர் தமிழன் பிரசன்னா, மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### மாலத்தீவு கடலோரக் காவல் படையால்

# கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் சந்தித்து தெரிவித்தார்!

தூத்துக்குடி, அக். 31 -

தூத்துக்குடி தருவைகுளத்தில், மாலத்தீவு கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்கள் மற்றும் விசைப்படகு உரிமையாளர் சங்கத்தினரை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். 12 மீனவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதியளித்தார். மாலத்தீவு சென்றுள்ள தமிழ்நாடு ஆழ்கடல் விசைப்படகு மீன்பிடி சங்கத் தலைவர் அந்தோணி ஜெயபாலனை தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு 12 மீனவர்களின் தற்போது நிலைமையைக் கேட்டு அறிந்தார்.

எல்லைத்தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி தூத்துக்குடி மீனவர்கள் 12 பேரை மாலத்தீவு கடற்படையினர் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது வலைதள பக்கத்தில் எனது தூத்துக்குடி தொகுதிக்குட்பட்ட தருவைகுளத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது மாலத்தீவு கடலோரக் காவல்படையினால் கைது செய்யப்பட்டிருப்பது மிகுந்த கவலை அளிக்கிறது. இந்திய வெளியுறவு அமைச்சகம் விரைந்து தலையிட்டு நமது மீனவர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி தருவைகுளம் பகுதியிலிருந்து அதே பகுதியைச் சேர்ந்த மைக்கேல் பாக்கியராஜ் என்பவரது படகில், கடந்த செப்டம்பர் மாதம் 1ம் தேதி ஆழ்கடலுக்கு விக்னேஷ், உதயகுமார், மைக்கேல் ராஜ், செல்வசேகரன், அந்தோணி கிறிஸ்டோபர், பரலோக திரவியம், அன்பு, ஆதிநாராயணன், மகேஷ் குமார், மாதேஷ் குமார், மணி, சக்தி ஆகிய 12 பேர் மீன்பிடிக்கச் சென்றார்கள்.

இவர்கள் மீன்பிடித்துவிட்டுக் கடந்த 23ம் தேதி மாலத்தீவு கடல் பகுதி வழியாகக் கரைக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த மாலத்தீவு கடற்படையினர், அத்து மீறி மாலத்தீவு கடல் பகுதிக்குள் நுழைந்ததாகக் கூறி, மீனவர்கள் 12 பேரையும் கைது செய்து, விசைப்படகையும் பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

மீனவர்களின் குடும்பங்களைச் சந்தித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆறுதல் கூறியபோது, ஒட்டப்பிடாரம் தொகுதி எம்.எல்.ஏ. சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி மன்றத் தலைவரும், தி.மு.க. ஒன்றிய செயலாளருமான இளையராஜா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்பட பலர் உடனிருந்தனர்.

### காரைக்குடியில் – சிவகங்கை மாவட்ட நகர, ஒன்றிய, பேரூர்,

# இளைஞரணி அமைப்பாளர்கள் - துணைஅமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

## அமைச்சர் கே.ஆர் .பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 31 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி உள்ளதாவது.



தமிழக முதல்வர் தளபதி மு .க. ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரிலும், மாநில இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் நாளை (நவம்பர் 1ம் தேதி) சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பர்மா காலனியில் உள்ள ராஜேஸ்வரி மகாலில் காலை 9 மணி அளவில் நகர , ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் எனது (கே.ஆர்.பெரியகருப்பன்) தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இந்த நேர்காணலில் இளைஞர் அணி மாநில துணை அமைப்பாளர்கள் ஜோயல், இன்பாரகு, இளையராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ் ,பிரபு, சீனிவாசன், பிரகாஷ்ராஜ் , ஆனந்தகுமார், ஆகிய துணை அமைப்பாளர்கள் நேர்காணலை நடத்துகிறார்கள்.

எனவே ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கு விண்ணப்பித்தவர்கள் அதற்கான வயது சான்றிதழுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் செய்து வருகிறார்.

எனவே விண்ணப்பித்தவர்கள் இதுதொடர்பான விபரங்களுக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்து உள்ளார்.

### மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களைச் சேர்ந்த வணிகர்களுக்கு

# சமாதானம் திட்டம் - 2023 விழிப்புணர்வு - திட்ட விளக்கக் கூட்டம்!

## வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, அக். 31 -

2023ஆம் ஆண்டு, தமிழ்நாடு வரிகள் (நிலுவைகள் தீர்வு செய்தல்) தொடர்பான சமாதான திட்டத்தின் சிறப்பியல்புகளை வணிகர்களுக்கு விளக்கும் வகையில்,

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், அரசு செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை, திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர், முனைவர் டி. ஜகந்நாதன் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொள்ளும், சமாதானம் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்க கூட்டம்:-



மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் விருதுநகர் கோட்டங்களை சார்ந்த வணிகர்களுக்கு இன்று (31.10.2023 - செவ்வாய்க் கிழமை) முற்பகல் 10.00 மணி அளவில் மதுரையில் உள்ள துவாரகா பேலஸ் அரங்கிலும், ( Dwarka Palace, பாண்டி கோவில் அருகில்)

சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மத்தியம்), காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் மற்றும் கடலூர் கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு 06.11.2023 திங்கட் கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கிலும், கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஒசூர் கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு 07.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று முற்பகல் 10.00 மணி அளவில் கோயம்புத்தூரில் உள்ள ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சமாதானத் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ள சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சார்ந்த வணிகர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வணிகவரித்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.





தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ,சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் ஆகியோர் ஜப்பான் நாட்டில் உள்ள (HIROSHIMA PEACE PARK) ஹீரோஷிமா அமைதி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு பூங்கொத்து வைத்து மரியாதை செலுத்தினர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில்

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, அக். 31 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்.என கழக நிர்வாகிகளுக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

01.01.2024 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.அதில் பெயர்களை சேர்த்திட,நீக்கிட திருத்தங்கள் மேற்கொள்ள 27.10.2023 முதல் வரும் 09.12.2023 வரை மனு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.இதனுடைய சிறப்பு முகாம்கள் 04.11.2023 சனி 05.11. 2023 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 18.11.2023 சனிக்கிழமை 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.



இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க,நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தந்த பகுதிகளில் ஒப்படைக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர,பேரூர்,உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் இதுவரை இடம் பெறாத வாக்காளர்களின் பெயர்களையும்,புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்,தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போது உள்ள பட்டியலில் இருந்து நீக்கவும்,உரிய படிவங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைத்து முழுமையாக பணியினை மேற்கொள்ள வேண்டும்.

பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04.11.2023 சனி 05.11.2023 ஞாயிறு 18.11.2023 சனி 19.11.2023 ஞாயிறு.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 01.01.2024.

மேற்படி அட்டவணைப்படி நடக்க உள்ள நாட்களில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய நகர,பேரூர், கழகச் செயலாளர்கள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2 )மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் வாக்காளர் சேர்த்தல், நீக்கல், பணிகளை மேற்கொண்டு அது குறித்த விவரங்களை மாவட்ட கழகத்திற்கு அவ்வப்போது கடிதம் மூலம் தங்கள் பகுதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் குறித்த விவரங்களை தகவல் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்

### அக்டோபர் 31 (1977)



**செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.**

**இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



புதூர் ஊராட்சி ஒன்றியம், அழகாபுரி அயன்கரிசல்குளம் நெடுஞ்சாலையில் ரூ.1.90கோடி மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம் அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.பி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். புதூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் மும்மூர்த்தி, புதூர் மத்திய ஒன்றியச் செயலாளர் ராதாகிருஷ்ணன், புதூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராஜ், விளாத்திகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ஞானகுருசாமி, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட துறை சார்ந்த அதிகாரிகள், ஊர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# சீர்காழி நகரக் கழக முன்னாள் செயலாளர் கோ.சம்பத் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

நாகை, அக். 31 -

மயிலாடுதுறை மாவட்ட சீர்காழி நகரக் கழகச் முன்னாள் செயலாளரும், சீர்காழி நகர்மன்ற முன்னாள் தலைவருமான கோ.சம்பத் (வயது 82) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சம்பத் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது கலைஞரை சீர்காழி நகராட்சிக்கு அழைத்து வந்தார், அப்போது கலைஞர் ஈரோட்டிற்கு ஒரு சம்பத், சீர்காழிக்கு ஒரு சம்பத் என்று கலைஞரால் பாராட்டப்பட்டவர் மறைந்த சம்பத்திற்கு மகள் மங்கை உள்ளார்.

கோயமுத்தூரில் இறந்த சம்பத்திற்கு கழகத்தினர் ஏராளமானவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



உலக முதலீட்டாளர் மாநாட்டு நிகழ்வு நடைபெறவிருக்கும் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தின் தற்போதைய வளாகத்துடன், இரண்டாவது வளாகம் மிகப் பரந்த அளவில், சர்வதேச தரத்துடன் புதிய வடிவத்தில் உருவாகி வருகிறது. இந்தப் பணிகளை தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு – வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

### இயக்கக் கொள்கை குறித்து புரிதல் ஏற்பட மாணவர்கள்

# புத்தகம் படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்!

## தி.மு.க. கருத்தியியல் பயிலரங்கத்தில் அமைச்சர் துரைமுருகன் பேச்சு!



*திருப்பத்தூர், அக். 31 -*

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அருகே ஏலகிரி மலையில் உள்ள தனியார் விடுதியில், தி.மு.க. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான கருத்தியியல் பயிலரங்கம் கூட்டம் மூன்று நாட்கள் நடக்கிறது.

இதில் திராவிட இயக்க சிந்தனை, கொள்கை, கோட்பாடுகள், இதுவரை தி.மு.க. சந்தித்துள்ள போராட்டங்கள், இப்போராட்டத்தின் மூலமாக பெற்றுள்ள வெற்றிகள், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு என்னென்ன திட்டங்கள் கொண்டு வரப்பட்டது என்பது குறித்து திராவிட சிந்தனையாளர்களை கொண்டு பயிற்சி நடத்தப்படுகிறது. நிகழ்ச்சிக்கு தி.மு.க மாணவரணி மாநில செயலாளரும், காஞ்சிபுரம் எம்.எல்.ஏவுமான சி.வி.எம்.பி.எம். எழிலரசன் தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை எம்எல்ஏவுமான க.தேவராஜி, எம்.எல்.ஏ. திருப்பத்தூர் நல்லதம்பி, ஆம்பூர் வில்வநாதன், அணைக்கட்டு ஏ.பி.நந்தகுமார் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் அனைவரையும் வரவேற்றுபேசினார்.

சிறப்பு அழைப்பாளராக கழக பொதுச்செயலாளரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது:

இன்றுள்ள மாணவர்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் வசதிகள் அன்றைக்கு கிடையாது. அன்றைய மாணவர்கள் கொள்கைகளில் உரம் பெற்ற மாணவர்களாகவே இருந்தனர்.

தி.மு.க. இயக்கம் என்பது மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான்.ஒரு பல்கலைகழகத்தில் ஆற்றோரம் என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா பேசிய பேச்சு மாணவர்கள் உலகத்தையே புரட்டிப் போட்டது.அதற்குப் பிறகுதான் பேரறிஞர் அண்ணாதுரை சக்தியாக மாறினார்.

அவரைத் தொடர்ந்து அப்போது இளைஞர்கள் அவரைப்பின் தொடர்ந்தார்கள்.

அப்போது பேரறிஞர் அண்ணாவை சுற்றி யார் யார் இருந்தார்களோ அவர்களையே இயக்கத்துக்கு உருவாக்கி தி.மு.க. கட்சியை ஆரம்பித்தார்கள்.ஆகவே மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் திமுக இயக்கம்.அப்போது யாரும் பெரிய பதவிகளில் இல்லை. மாணவர்கள் தங்களை வலிமை மிக்கவர்களாக மாறிக் கொண்டார்கள்.

தி.மு.க.வில் நிறைய பேர் இணைவார்கள் , ஆனால், அவர்களில் பலர் சிதறி போவார்கள் கொஞ்சம் பேர் மட்டும் தான் நிலைத்திருப்பார்கள். அப்படி நிலைப்பதற்கு காரணம் அவர்களுக்கு முதலில் தி.மு.க.வின் கொள்கை குறித்து புரிதல் ஏற்படுத்த வேண்டும். கட்சியில் சேர்வது பெரியதல்ல, சேர்ந்த பிறகு தி.மு.க.வை பற்றியும், அதன் லட்சியத்தை பற்றியும்,

வரலாற்றை பற்றியும், தலைவர்களை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி யார் யாரெல்லாம் தெரிந்து கொள்கிறார்களோ அவர்களுக்கு கொள்கையிலேயே பிடிப்பு ஏற்படும். அவர்கள் தான் தாக்கு பிடிப்பார்கள்.

யார் யாரெல்லாம் இதெல்லாம் கேட்டும் கேட்காமல் போகிறார்களோ அவர்கள் எல்லாம் இடையிலேயே விழுந்து விடுவார்கள்.

எது எப்படி இருந்தாலும் இயக்கத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

நமக்கு வரலாறு தெரியாவிட்டால் நாம் வாழ்க்கை நடத்த முடியாது. வரலாற்றை மறந்த இனம் நினைவிழந்த மனிதனுக்கு சமம்.நாம் நம்முடைய இனம் கெட்டுப் போனதற்கு காரணம் வரலாற்றை மறந்ததுதான். நாங்கள் இலையுதிர் காலத்தில் இருக்கிறோம். நீங்கள் துளிர்கின்ற காலத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள்.

தற்போது அரசியலில் மோடியைப் பற்றி பேசினாலும், இறந்து போன லேடி பற்றி பேசினாலும் அல்லது யாரைப் பற்றி பேசினாலும் முதலில் அவர்களை முழுமையாக தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

முதலில் கொள்கையை தெரிந்து கொள்ளுங்கள் அதற்குப் பிறகு அந்தக் கொள்கைக்கு ஆதாரங்களை தேடி படியுங்கள். அதன் பிறகு மற்றவர்களோடு விவாதித்து அவர்களை தன் பக்கத்திலேயே ஈர்ப்பதற்கான முயற்சி செய்யுங்கள் அதுதான் கட்சிக்கு சேர்க்கும் பணிகள்.

தலைவர் கலைஞர், பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்கள், பழம்பெரும் நூல்கள், வரலாற்று, அரசியல் நூல்கள் இவையெல்லாம் படிக்க பழகுங்கள்.

திமுக இல்லையென்றால் தமிழகம் இருக்காது, தமிழ் இருக்காது, தி.மு.க. என ஒன்று இல்லை என்றால் இந்த நேரம் இந்தியை இங்கு உட்கார வைத்து எல்லாத்தையும் முடித்து இந்தியா என்ற பெயரையே மாற்றி இருப்பார்கள் இவ்வாறு அவர் பேசினார்.

திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், மற்றும் கழகநிர்வாகிகள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

---

### திராவிட மாடல் அரசின் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சிக்கான

# உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுப் பணிகள் புயல் வேகம்!

## நேரில் ஆய்வுகளை மேற்கொண்டார் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா!

*சென்னை, அக். 31 -*

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஒரு டிரில்லியன் டாலர் என்ற இலக்காகக் கொண்டு கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் சிறப்பான செயல்திட்டங்களை வகுத்துள்ளார். இந்தியாவில் தொழில் தொடங்குவதற்குரிய அனைத்துக் கட்டமைப்புகளையும் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு கடந்த இரண்டாண்டுகளில் முன்னேறியுள்ளது. இதன் அடுத்த கட்டமாக, 2024 ஜனவரியில் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் உலகின் முன்னணி தொழில்நிறுவனங்கள், உலகளாவிய தொழிலதிபர்கள் பங்கேற்று தமிழ்நாட்டில் முதலீட்டுக்கான ஒப்பந்தங்களில் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்திட்டு, செயல்படுத்தவுள்ளனர்.

உலக முதலீட்டாளர் மாநாட்டு நிகழ்வு நடைபெறவிருக்கும் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தின் தற்போதைய வளாகத்துடன், இரண்டாவது வளாகம் மிகப் பரந்த அளவில், சர்வதேச தரத்துடன் புதிய வடிவத்தில் உருவாகி வருகிறது. இந்தப் பணிகளை தொழில்முதலீட்டு ஊக்குவிப்புவர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வுகளை மேற்கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக தொழில்துறை நிறுவனங்களின் நிகழ்வுகள் நடைபெறுவதற்கும், அதிக முதலீடு, அதிக வேலைவாய்ப்புகள் உருவாவதற்கும் அடித்தளம் அமைக்கவிருக்கும் 2024 உலக முதலீட்டாளர் மாநாட்டிற்கான புதிய வளாகத்தின் பணிகள் புயல் வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

---



### தாம்பரம் மாநகர திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்

# மாநகர பிரதிநிதிகள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



தாம்பரம் மாநகரக் கழகத்தின் சார்பில் மாநகர பிரதிநிதிகள் கூட்டம் நாளை (01.11.2023) மாலை 4 மணி அளவில் மேற்கு தாம்பரம் கோண் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் மாநகர அவை தலைவர் துணை மேயர் கோ.காமராஜ் தலைமையிலும் மாநகர துணைச் செயலாளர்கள் மேயர் க.வசந்தகுமாரி இரா.நரேஷ் கண்ணா.எம்.சி பி.சதாசிவம் மற்றும் மாநகர பொருளாளர் ஏ.விஜயரங்கன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. மேலும் மாநகரத்துக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மாவட்ட, மாநகர, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1.வருகின்ற 5 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை திருவள்ளூரில் நடைபெறுகின்ற பாகநிலை முகவர்கள் (BLA2) கூட்டம்

2.வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு வாக்காளர் சேர்ப்பு நீக்கல் முகாம்களில் கழக பாக நிலை முகவர்களின் களப்பணி குறித்து

3.கழக வளர்ச்சிப் பணி

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.**
செயலாளர்
தாம்பரம் மாநகர தி.மு.க.



---

## கரூரில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

*கரூர், அக். 31 -*

கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மத்திய, மாநகர கிழக்கு பகுதி பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது.

மத்திய மாநகரக் கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ். ராஜா தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தினகரன் பங்கேற்று வாக்குச் சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மத்திய மாநகர கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பாலம் மாள்புரம், வ.உ.சி.நகர், பசுபதிபாளையம், கொளந்தா கவுண்டனூர் பகுதிகளை சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.


---

# தேவரும் அண்ணாவும்!

**(சிறுகதை மன்னன் - முகவை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் 16.09.1990 ஆம் ஆண்டு “ஆனந்த விகடன்” வார இதழில் எழுதி வெளியான கட்டுரை ‘பாறையிலும் பயிர்கண்டார்’. அதை இங்கே எடுத்து வெளியிட்டுள்ளோம்)**

பேரறிஞர் அண்ணா அனைத்துத் துறைகளிலும் பெரு வெற்றி அடைந்ததற்குக் காரணம் அவரது அறிவாண்மை மட்டுமல்ல, அவரிடம் நிறைந்திருந்த இனிய இயல்புகளும் பிரதானமானவை.

‘கோபம் கொடியதுதான்; இருப்பினும் கொஞ்சம் நேரம் மௌனமாக இருந்து விட்டால் கோபம் ஆறிவிடும்’ என்ற கொள்கையை இறுதிவரை கடைப்பிடித்து அதன் மூலம் மகத்தான வெற்றியை ஈட்டிக் கொண்டவர் அண்ணா, 1962 - வாக்கில் நடந்த சம்பவம் ஒன்று இன்றைக்கும் என் மனத்தில் அழியாத ஓவியமாக நிலைத்து நிற்கிறது.



இப்போது இருப்பதைப் போல அப்போது தொலைபேசி வசதிகள் இல்லாத காலம் அன்று கழகத்தின் பொருளாளராக இருந்த கலைஞரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், **“நீங்கள் உடனடியாகத் திருச்சிக்குச் சென்று, அங்கு ரத்தினவேல் தேவர் இல்லத்தில் தங்கியிருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைச் சந்தித்து நடக்கவிருக்கும் தேர்தலில், சிவகங்கைப் பாராளுமன்றத் தொகுதியில், தி.மு.க. வேட்பாளரை ஆதரிக்கக் கோரி அவரிடம் வேண்டுகோள் விடுத்து வரும்படி அண்ணா பணித்திருக்கிறார்”** என்று கலைஞர் குறிப்பிட்டிருந்தார். மறுநாள் காலையே திருச்சி புறப்பட்டுவிட்டேன்.

மாலை நான்கு மணியளவில் தேவரைச் சந்திக்க நான் அனுமதிக்கப்பட்டேன். தேவரின் உதவியாளர் எனக்குப் பத்து நிமிடங்கள்தான் அவகாசம் கொடுத்தார். எனக்குப் பிறகு தேவரைச் சந்திக்க நிறையப் பேர் காத்திருந்தார்கள். தேர்தல் நேரமல்லவா!

பசும்பொன் தேவர் மாடியில் ஒரு தேக்கு மர ஊஞ்சலில், தலைக்குத் தலையணையில்லாமல் படுத்தபடி ஆடிக் கொண்டிருந்தார். நான் அவரைப் பலமுறை தொலைவிலிருந்து பார்த்திருக்கிறேன்... அவரது மேடைப் பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன். அருகில் போய் அவரோடு பேசுவது என்பது அதுதான் முதல் முறை, அரைகுறையாக நரைத்த முடி. எலுமிச்சம்பழம் போல மூக்கு. களையான முகம். இன்ன வண்ணம் என்று சொல்ல முடியாத ஆற்றுமணல் நிறம்.



**சிறுகதை மன்னன்**
**எஸ்.எஸ்.தென்னரசு**
*முகவை மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்*

கிடைத்திருக்கும் பத்து நிமிடங்களுக்குள் வந்த காரியத்தை முடித்துக் கொள்ளத் துடித்தேன் ஆனால், தேவர் அதற்கு வாய்ப்பளிக்காமல் தி.மு.கவைப் பற்றிய விவரங்களையே துருவித் துருவிக் கேட்டுக் கொண்டிருந்தார் தி.மு.க. வைச் சேர்ந்த ஒரு முக்கிய புள்ளியிடம் தேவர் மனம் விட்டுப் பேசுவது அதுதான் முதல் முறையாக இருக்குமோ என்று நான் சந்தேகித்தேன். பின்னாளில் விசாரித்த போது அதுதான் உண்மை என்று தெரிந்தது.

இதற்கிடையில் கீழேயிருந்து தேவரின் உதவியாளர் - நேரம் முடிந்து விட்டது என்று எனக்கு ஒரு துண்டுச் சீட்டு அனுப்பி விட்டார்.

வந்தது வீணாகிவிடக் கூடாது என்ற எண்ணம் எனக்கு வந்துவிட்டது. ஆகவே, உடனே முன்னுரை எதுவும் போடாமல் வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டேன். தேவர் முதலில் சிரித்தார்.

‘சாத்தியமில்லாத விஷயம்; இருந்தாலும்...” என்று இழுத்தார்.

“நீங்கள் ஆதரிக்க முடியாவிட்டாலும், கழக வேட்பாளரை எதிர்க்காமல் இருந்தாலே போதும்!” என்றேன். “அதுபற்றி வேண்டுமானால் நான் யோசிக்கிறேன்” என்றார்.

“தேவர் இப்படி யாரிடமும் இணக்கமாகப் (positive) பேசியதில்லை” என்று கீழே வந்ததும் அவரது உதவியாளர் சொன்னார்.

மகிழ்ச்சியோடு நான் அவரிடம் விடை பெற்றேன். ஆனால், தேவர் என்னை விடவில்லை. அப்போதே தேவரின் மனமாற்றம் எனக்குப் புரிந்து விட்டது. “உங்கள் கட்சியில் அண்ணன் - தம்பி என்கிற முறையில் இயக்கத்தை நடத்துவது எதற்காக? தலைவன் - தொண்டன் என்கிற முறையில்தான் ஒரு அரசியல் கட்சி இருக்க வேண்டும்’’ என்றார்.



நான் ஏதாவது பதில் சொன்னால், வந்த காரியம் கெட்டுவிடுமோ என்று எண்ணிப் பதில் சொல்லாமல் இருந்து விட்டேன்.

தேவர் மறுபடியும் பேசினார். அப்போது பேசியதை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது.

**“அண்ணாதுரையைப் பற்றி எடுத்த எடுப்பில் நான் கணித்தது தவறு. அவர் மிகவும் பெருந்தன்மையானவர். சில ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ஆடிவீதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் நான் அவரைப் பற்றிக் கடுமையாக விமரிசனம் செய்துவிட்டேன், அதே தினத்தில் மதுரையில் அண்ணாதுரைக்கு ஒரு பொதுக்கூட்டம் இருந்தது. அதில் என்னைத் தாக்குவார் என்று எங்கள் மக்கள் திரண்டிருந்தார்கள். ஆனால், அண்ணாதுரை முற்றிலும் எதிர்பாராத வகையில் என்னை ஒரே தூக்காகத் தூக்கிப் பாராட்டிப் பேசிவிட்டார். தேவர் இல்லாவிட்டால் தென் பாண்டி நாட்டில் காங்கிரஸே வளர்ந்திருக்காது என்று என்னை வெகுவாகப் புகழ்ந்து பேசினார். இது நான் எதிர்பார்க்காத ஒன்று. அதுமட்டுமல்ல, என்றைக்கும் நான் மறக்க முடியாத நிகழ்ச்சி”** என்றார் தேவர்.



நான் மனத்துக்குள்ளேயே மகிழ்ந்தேன். எதற்காக? அறிஞர் அண்ணா கல்லிலேயும் காவியம் தீட்டிவிட்டாரே என்பதற்காக. இந்தச் சம்பவங்களை அண்ணாவிடமும், கலைஞரிடமும் விவரமாகச் சொன்னேன். இது நடந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு தேவர் உடல்நலம் குன்றி மதுரை திருநகர் வந்து சேர்ந்து விட்டார்.

அதே ஆண்டில் திருப்பரங்குன்றத்தில் தி.மு.க. மாநில மாநாடு நடந்தது. அண்ணா, தேவர் சொன்னதையும், கேட்டதையும் மனத்திலேயே வைத்திருந்து மாநாட்டுப் பேருரையில் அதற்கு விளக்கம் அளித்தார்.

**“நான், அண்ணன் - தம்பி என்கிற முறையில் கட்சி வளர்ப்பது பற்றிச் சிலர் வியப்படைகிறார்கள். ஒரு குடும்பத்தின் சொத்தில் அண்ணனுக்குள்ள உரிமையும் பங்கும் தம்பிக்கும் தவறாது கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் கட்சியில் அண்ணன் - தம்பி முறையைக் கடைப்பிடிக்கிறேன் தி.மு.க. ஒரு குடும்பப் பாசமுள்ள இயக்கம்’** என்று அண்ணா பதில் சொன்னார். இந்தத் தகவல் படுக்கையில் இருந்த தேவருக்குத் தெரிவிக்கப்பட்டது. தேவர் ஆறுதல் அடைந்து திருப்திப்பட்டதாக அறிந்தேன்.

தேவரின் கடைசி கால மனமாற்றத்தை எண்ணி அண்ணா வியப்படைந்தார், 1963இல் தேவர் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டுத் திருநகரில் காலமானார். இதைக் கேள்விப்பட்ட அண்ணா துணுக்குற்று, உடனே சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு, பசும்பொன் கிராமம் வந்து தேவரின் உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். அன்று அண்ணா ஆற்றிய இரங்கல் உரையில், **“மண்ணுக்குள் கிடந்தவர்களை எல்லாம் மாணிக்கமாக்கிய மாபெரும் தேசியத் தலைவர் தேவர்”** என்று புகழாரம் சூட்டினார். இன்றும் அந்த வரிகள் தேவர் பிறந்த மண்ணில், பனை மரங்கள் மண்டிக்கிடக்கும் அந்த வனாந்திரப் பகுதியில் சலசலத்துக் கொண்டிருக்கின்றன.

தனது பெருந்தன்மையால் தேவரின் உள்ளத்தில் அண்ணா விதைத்த விதை, எதற்கும் அசையாத பாறை போன்ற உள்ளம் படைத்த தேவரை வசீகரித்து விட்டது. அன்று தேவரின் கோட்டைக்குள் நீர்மூழ்கிக் கப்பலைப் போல் நுழைவதற்கு வாய்ப்பளித்தது அண்ணாவின் இனிய இயல்பான பொறுமையேயன்றி வேறல்ல!

**எழுத்தாலும், பேச்சாலும் வெல்ல முடியாத ஒன்றைக் கண்ணியத்தாலும், கனிவாலும் வென்று பாறையிலும் பயிர் காணவல்ல பண்பாளர் என்று அண்ணாவைக் குறிப்பிடுவது வரலாற்றின் வற்புறுத்தல் என்று கொள்ளலாம்!**

நன்றி
**ஆனந்த விகடன்**
16.09.1990

# தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் M.P. அவர்களின் அறிவிப்பு



**தஞ்சை வடக்கு மாவட்டம் - 2024 நாடாளுமன்ற தேர்தல் பணி மற்றும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் குழு**

கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், ஆகியோர்களை கண்காணிப்பதற்கும், நேரில் சந்தித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும்பணியை மேற்கொள்வதற்கும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் முன்னிலையில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கீழ்க்கண்ட பட்டியல்படி ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகத்திற்கு கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**தொகுதி பார்வையாளர்கள்**

| 170-திருவிடைமருதூர் தொகுதி | 171-கும்பகோணம் தொகுதி | 172-பாபநாசம் தொகுதி |
|---|---|---|
| **எஸ்.கே.வேதரத்தினம்**<br>மாநில விவசாய அணி துணைத்தலைவர் | **வண்ணை அரங்கநாதன்**<br>மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் | **உ.மதிவாணன், பி.ஏ., பி.எல்.,**<br>மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் |

| திருவிடைமருதூர் தொகுதி | கும்பகோணம் தொகுதி | பாபநாசம் தொகுதி | குடந்தை மாநகரம் |
|---|---|---|---|
| **செ.ராமலிங்கம் MP**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**கோவி.செழியன்**<br>அரசு தலைமை கொறடா<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**க.நசீர் முஹம்மது**<br>மாவட்ட அவைத்தலைவர் - 9443324430 | **க.அன்பழகன் MLA**<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>**ஜெ.நடராஜன்**<br>மாவட்ட பொருளாளர்<br>9894624974<br>**குட்டி.இரா.தெட்சிணாமூர்த்தி**<br>தலைமை செயற்குழு உறுப்பினர் | **மு.சண்முகம் MP**<br>தொ.மு.ச பொதுச்செயலாளர்<br>மாவட்ட கழக து.செயலாளர்கள்<br>**கோ.வி.அய்யாராசு**<br>9443806213<br>**S.துரை முருகன்**<br>9025256200 | **சு.ப.தமிழழகன்**<br>மாநகர கழக செயலாளர்<br>9443086522<br>மாவட்ட கழக அலுவலகம்<br>**க.செந்தில்குமார்**<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்<br>9566633331 |

| ஒன்றியம் / பேரூர் / பகுதி | தலைமை ஒன்றியம் / பேரூர் / பகுதி செயலாளர் | தொகுதி | பூத் எண்ணிக்கை | கிளை எண்ணிக்கை | கண்காணிப்பு குழு பெயர் | பொறுப்பு | செல் |
|---|---|---|---|---|---|---|---|
| **திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம்** | R.உதயச்சந்திரன் | 170 - திருவிடைமருதூர் தொகுதி | 30 | 103 | வை.வினோத்குமார் | அமைப்பாளர், வி.தொழிலாளர் அணி | 9843687587 |
| | | | | | எம்.வேணுகோபால் | தலைவர், வி.தொழிலாளர் அணி | 9952285750 |
| | | | | | சி.சங்கர் | துணை தலைவர், வி.தொழிலாளர் அணி | 9994836616 |
| **திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியம்** | கோ.க.அண்ணாதுரை | | 32 | 105 | G.K.M.ராஜா | அமைப்பாளர், இளைஞர் அணி | 9677494949 |
| | | | | | T.V.S.சிலம்பரசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9787564943 |
| **திருப்பனந்தாள் பேரூர்** | T.M.சப்பாணி | | 9 | 15 | க.மதியழகன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 8903879767 |
| **திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியம்** | மிசா.M.மனோகரன் | | 37 | 105 | P.ரவிச்சந்திரன் | அமைப்பாளர், விவசாய அணி | 9842447018 |
| | | | | | தி.துரை | தலைவர், விவசாய அணி | 9442635435 |
| | | | | | V.V.நடராஜன் | துணை தலைவர், விவசாய அணி | 9445772066 |
| **திருவிடைமருதூர் வடக்கு ஒன்றியம்** | செ.ராமலிங்கம் MP | | 69 | 123 | சே.வெங்கடேசன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9443155601 |
| | | | | | சன்.செள.ஸ்டாலின் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 7397630764 |
| | | | | | S.M.மணிகண்டன் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9500769771 |
| | | | | | D.விஜய் பிரசாத் | துணை அமைப்பாளர், இளைஞர் அணி | 9790076726 |
| **ஆடுதுறை பேரூர்** | கோ.சி.இளங்கோவன் | | 44 | 60 | இராஜா.இரகுபதி | அமைப்பாளர், பொறியாளர் அணி | 9750977711 |
| **திருவிடைமருதூர் பேரூர்** | சுந்தர.ஜெயபால் | | | | ஜெ.சம்பத்குமார் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9941216838 |
| **வேப்பத்தூர் பேரூர்** | V.மகாலிங்கம் | | | | A.வள்ளிகண்ணன், | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 9442166688 |
| **திருபுவனம் பேரூர்** | எஸ்.கே.பஞ்சநாதன் | | | | ஆர்.சக்திவேல் | துணை அமைப்பாளர், பொறியாளர் அணி | 7845377046 |
| **திருவிடைமருதூர் தெற்கு ஒன்றியம்** | C.அம்பிகாபதி | | 57 | 171 | தம்பி தேவரத்தினம் | மு.மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் | 9894627237 |
| | | | | | R.F.இஸ்ரேல் | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9943193462 |
| | | | | | செள.தேவராஜ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9092928940 |
| | | | | | மு.உதயகுமார் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9360219153 |
| **கும்பகோணம் கிழக்கு ஒன்றியம்** (திருவிடைமருதூர் தொகுதி) | J.சுதாகர் | | 12 | 32 | மு.ரகு | துணை அமைப்பாளர், வர்த்தகர் அணி | 7010575866 |
| **கும்பகோணம் கிழக்கு ஒன்றியம்** | J.சுதாகர் | 171 – கும்பகோணம் தொகுதி | 26 | 100 | R.முருகன் | அமைப்பாளர், வர்த்தகர் அணி | 9942075252 |
| | | | | | S.G.ராஜன் | தலைவர், வர்த்தகர் அணி | 9443395925 |
| **சோழபுரம் பேரூர்** | J.ஜபுருதீன் | | 7 | 15 | பு.காளிதாஸ் | துணை அமைப்பாளர், ஐ.டி. விங்க் | 9840052626 |
| **கும்பகோணம் மத்தியம் ஒன்றியம்** | T.கணேசன் | | 79 | 124 | V.சிவக்குமார் | அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9443126565 |
| | | | | | R.வசந்தராஜ் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 9629816198 |
| | | | | | S.ஸ்டாலின் | து. அமைப்பாளர், விளையாட்டு மேம்பாட்டு அணி | 8098818575 |
| **திருநாகேஸ்வரம் பேரூர்** | சீ.தாமரைச்செல்வன் | | 14 | 15 | சுபா திருநாவுக்கரசு | அமைப்பாளர், மகளிர் அணி | 6383534829 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 1** | இரா.செல்வராஜ் | | 34 | 12 வார்டுகள் | ப.புகழேந்தி | அமைப்பாளர், மீனவர் அணி | 7539908311 |
| | | | | | M.யோகாநந்தம் | தலைவர், மீனவர் அணி | 9442741826 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 2** | இரா.கல்யாணசுந்தரம் | | 30 | 12 வார்டுகள் | A.சுந்தரமூர்த்தி | அமைப்பாளர், அயலக அணி | 9944555554 |
| | | | | | A.சாதிக் பாட்சா | துணை அமைப்பாளர், அயலக அணி | 9677382998 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 3** | T.V.கிருஷ்ணமூர்த்தி | | 33 | 12 வார்டுகள் | V.செல்வராஜ் | அமைப்பாளர், தொழிலாளர் அணி | 9442431188 |
| | | | | | S.பாரி | தலைவர், தொழிலாளர் அணி | 9443712741 |
| **கும்பகோணம் மாநகரம் பகுதி – 4** | மு.கண்ணன் | | 32 | 12 வார்டுகள் | K.செல்வமுத்துகுமரன் | அமைப்பாளர், சுற்றுசூழல் அணி | 9787226050 |
| | | | | | G.மணிவர்மன் | துணை தலைவர், சுற்றுசூழல் அணி | 9442459388 |
| **கும்பகோணம் மேற்கு** (கும்பகோணம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | | 40 | 116 | கோ.மாரியப்பன் | அமைப்பாளர், இலக்கிய அணி | 8524923168 |
| | | | | | க.அண்ணாதுரை | துணைத்தலைவர், இலக்கிய அணி | 9443402850 |
| **கும்பகோணம் மேற்கு** (பாபநாசம் தொகுதி) | சு.க.முத்துசெல்வம் | 172 – பாபநாசம் தொகுதி | 23 | 37 | G.R.பிரகாஷ் | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9842095110 |
| | | | | | G.பாலாஜி | துணை அமைப்பாளர், இலக்கிய அணி | 9790590129 |
| **சுவாமிமலை பேரூர்** | S.பாலசுப்ரமணியம் | | 7 | 15 | R.ராஜேஷ் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9994383759 |
| **பாபநாசம் தெற்கு ஒன்றியம்** | N.நாசர் | | 58 | 131 | மு.கோபிநாத் | அமைப்பாளர், ஆதிதிராவிடர் அணி | 9965085851 |
| | | | | | அ.செல்வராஜ் | தலைவர், ஆதிதிராவிடர் அணி | 9940935703 |
| **பாபநாசம் பேரூர்** | ச.கபிலன் | | 14 | 15 | லண்டன் குணா | துணை தலைவர், வர்த்தகர் அணி | 9789355967 |
| **பாபநாசம் வடக்கு ஒன்றியம்** | கோ.தாமரைச்செல்வன் | | 57 | 159 | ஆர்.லெட்சுமணன் | அமைப்பாளர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443122481 |
| | | | | | நா.மலர்மன்னன் | தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 9443378993 |
| | | | | | முகம்மது கலிபா | துணைத்தலைவர், அ.சா.ஓட்டுநர் அணி | 7397536124 |
| **அய்யம்பேட்டை பேரூர்** | T.P.T.துளசி அய்யா | | 14 | 15 | K.வினோத்குமார் | துணை அமைப்பாளர், மாணவர் அணி | 9626383809 |
| **அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம்** | தியாக.சுரேஷ்குமார் | | 51 | 129 | D.R.அனந்தராமன் | அமைப்பாளர், நெசவாளர் அணி | 9894046069 |
| | | | | | V.S.மோகன் | தலைவர், நெசவாளர் அணி | 9994235820 |
| | | | | | K.சங்கர் | துணைத்தலைவர், நெசவாளர் அணி | 9994384719 |
| **மெலட்டூர் பேரூர்** | V.சீனிவாசன் | | 8 | 15 | தமிமுல் அன்சாரி | துணைத்தலைவர், சிறுபான்மை அணி | 9894671425 |
| **அம்மாபேட்டை பேரூர்** | தியாக.ரமேஷ் | | 12 | 15 | M.முபாரக் ஹுசைன் | துணை அமைப்பாளர், கலை இலக்கிய அணி | 9488110448 |
| **அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம்** | P.S.குமார் | | 51 | 99 | தா.அனிபா | அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944886544 |
| | | | | | N.A.M.யூசுப்அலி | தலைவர், சிறுபான்மை அணி | 9443463786 |
| | | | | | H.ராயல் அலி | துணை அமைப்பாளர், சிறுபான்மை அணி | 9944885548 |

மாவட்ட கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (பி.எல்.சி), பி.எல்.ஏ-2 ஆகியோர்களுடன் நேரில்கள ஆய்வு செய்து 01.01.2024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப்படுத்துவதுடன், முகாம் நடைபெறும் நாளான நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்துச்சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாவடிக்குச் சென்று படிவம்-6, 6ஏ, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள் சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்ட கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன் முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்காளர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான தாசில்தார் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10.2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்ட கழக அலுவலகத்தில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க**

**சு.கல்யாணசுந்தரம் M.P.**
மாவட்ட கழக செயலாளர்

# மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் - கழகத்தினர் எழுச்சிமிகு வரவேற்பு அளித்த காட்சி!









ஆந்திர மாநிலம் - விஜய நகரத்தில் இரயில்கள் மோதி விபத்து:

## இரயில்வே பாதுகாப்பு முறைகளை மீளாய்வு செய்திடுக!

### இரங்கல் செய்தியில் ஒன்றிய அரசுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**மதுரை,அக்.31 -**

**ஆந்திர மாநிலம் - விஜயநகரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவாகள் விடுத்துள்ள செய்தி வருமாறு:**

ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் இரயில்கள் மோதி நிகழ்ந்த விபத்து குறித்து அறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன். 2023 ஜூன் மாதம் பாலசோர் இரயில் விபத்து ஏற்பட்டு, சில மாதங்களே ஆன நிலையில் மீண்டும் இத்தகைய விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை எண்ணி மனமிரங்குகிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் நலம் பெற விழைகிறேன்.

பெருவாரியான இந்தியர்கள் தங்களின் பயணத்திற்காக இரயில்களையே சார்ந்திருக்கும் சூழலில் குறுகிய கால இடைவெளியில் விபத்துகள் தொடர்கதையாவது மிகுந்த கவலையளிக்கிறது. இரயில்வே பாதுகாப்பு முறைகளை உடனடியாக ஒன்றிய அரசு மீளாய்வு செய்து, மேம்படுத்திப் பயணிகளின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும், அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.


இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்து சமுதாய மக்களால் போற்றப்பட்டவர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர்!

### திண்டுக்கல்லில் தேவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், அக். 31-

அனைத்து சமுதாய மக்களால் போற்றப்பட்டவர் தேவர் திருமகனார் என்று திண்டுக்கல் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி அலுவலகத்தில் பசும்பொன் முத்தராமலிங்க தேவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.



திண்டுக்கல் 9வது வார்டு நந்தவன ரோட்டில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாவட்ட அலுவலகம் உள்ளது தேவர் ஜெயந்தியை முன்னிட்டு மாவட்ட அலுவலகத்தில் தேவர் திருமகனார் திருவுருவப்பட திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி தேசிய செயலாளர் பி.எஸ்.ஜெயராம் சந்தனத்தேவர் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் கர்ணன் முன்னிலை வகித்தார்.

மாவட்டச் செயலாளர் பால்பாண்டி வரவேற்று பேசினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் கலந்துகொண்டு பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து விட்டு பேசுகையில் ஜாதி, மத, இனங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து மக்களின் நன்மதிப்பை பெற்றவர் தேவர் திருமகனார். அவரின் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் ஒன்றிய தி.மு.க. செயலாளர் நெடுஞ்செழியன், நிலக்கோட்டை ஒன்றிய தி.மு.க. செயலாளர் நெடுஞ்செழியன், கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், மாமன்ற உறுப்பினர் சுபாஷ், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி திண்டுக்கல் மாவட்ட துணைத் தலைவர் சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர் டி.விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் எஸ்.சேனாதிபதிமணி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.பி.டி.பிரகாஷ், ஆத்தூர் ஒன்றிய செயலாளர் சி.பி.வடிவேல், மற்றும் மாநகர தலைவர் ஈஸ்வரமூர்த்தி, செயலாளர் இளஞ்செழியன், உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## கேரளாவில் வழிபாட்டுக் கூட்ட அரங்கில் நடைபெற்ற குண்டு வெடிப்பு!

### மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, அக். 31 -

கேரளாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பு குறித்து மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே உள்ள களமசேரியில் ஞாயிறு தோறும் நடக்கும் கிறிஸ்தவ மத சிறப்பு ஜெபக்கூட்டம் நடக்கும் இடத்தில் இன்று காலை 9 மணியளவில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் நடை



பெற்றுள்ளது. இதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் தெரிகின்றன.

வன்முறை நிகழ்வுகள் அது எந்த வடிவத்தில் வந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பயங்கரவாத நடவடிக்கையின் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சம்பவத்தில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் மிக விரைவில் குணம் பெற்று இல்லம் திரும்ப பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



அனைத்து சமுதாய மக்களால் போற்றப்பட்டவர் தேவர் திருமகனார் என்று திண்டுக்கல் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி அலுவலகத்தில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் தேசிய செயலாளர் பி.எஸ்.ஜெயராம் சந்தனத் தேவர் உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

ஏழை, எளிய பெண்களின் முன்னேற்றத்திற்காக

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்!

### அறந்தாங்கியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!

புதுக்கோட்டை, அக். 31 -

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி பட்டுக்கோட்டை சாலையில், கே.வி.எஸ். திருமண மஹாலில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 28.10.2023 அன்று குத்துவிளக்கேற்றி பங்கேற்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பெண்களின் முன்னேற்றத் திற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ், சமுதாய வளைகாப்பு விழா இன்றையதினம் நடத்தப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் போஷான் அபியான் திட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஜன் அன்தோலன் (*Jan Andolan*) செயல்பாடுகள் தேசிய ஊட்டச்சத்து மாதமான செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கர்ப்பிணிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமுதாய வளைகாப்பு விழா நடத்திட வட்டாரத்திற்கு ரூ.25,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட அளவிலான சமுதாய வளைகாப்பு விழா 300 கர்ப்பிணி பெண்களுக்கும், கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் 100 கர்ப்பிணி பெண்களுக்கும் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அறந்தாங்கியில் 300 கர்ப்பிணி பெண்களுக்கு நடைபெற்றது. கர்ப்பிணி பெண்கள் தமிழக அரசின் நலப் பயன்



களை பெற்று பயனடையும் வகையில், ஊட்டச் சத்து மிக்க உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமான குழந்தைகளை பெற்று வளர்க்க வேண்டும். மேலும் கர்ப்பிணிகளுக்கு வளையல், மஞ்சள், குங்குமம், பூ, கையேடு, பழங்கள் அடங்கிய பரிசுத் தட்டுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன் , அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, ஒன்றிய குழு உறுப்பினர் சக்தி ராமசாமி, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் வசந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார்.



வேலூர் மாவட்டம் காட்பாடி தாராபடவேடு மற்றும் கழிஞ்சூர் ஏரிகளில் நடக்கும் சீரமைப்பு பணிகளை கழக பொதுசெயலாளரும்,நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம் சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா,பகுதி செயலாளர் வன்னியராஜா, மாமன்ற உறுப்பினர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


பெங்களூரு பேருந்து நிலையத்தில்

# தனியார் பேருந்துகள் தீப்பிடித்தது!

பெங்களூரு, அக். 31-

பெங்களூரு வீரபத்ர நகரில் உள்ள பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்துகள் தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பெங்களூரு வீரபத்ரா நகரில் உள்ள பேருந்து நிலை யத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. பஸ் டிப்போவில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகள் தீயினால் எரிந்து நாசமாகின.

பெங்களூரு வீரபத்ரநகர் பேருந்து நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேருந்துகள் தீயில் கருகின. இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். தீ விபத்துக்கான காரணமும் இன்னும் கண்டறியப்படவில்லை.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், நேற்று (30.10.2023) சென்னை, நந்தனத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, உறுப்பினர்கள் த.வேலு, தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தூத்துக்குடியில் இறகுப்பந்து

# உள்விளையாட்டரங்கத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார்!

## அமைச்சர் கீதாஜீவன் - மேயர் ஜெகன் பெரியசாமி பங்கேற்பு!

தூத்துக்குடி, அக். 31 -

தூத்துக்குடி கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, தூத்துக்குடி மாநகராட்சி சார்பில், மாநகராட்சிக்குட்பட்ட கிரேட் காட்டன், அசோக் நகர், புல்தோட்டம் மற்றும் சுந்தரவேல்புரம் ஆகிய இடங்களில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள் திறப்பு விழாவிற்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன் தலைமை தாங்கினார். மாவட்ட கலெக்டர் லட்சுமிபதி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காக புதிதாக கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்து பேசுகையில், உள்விளையாட்டரங்கம் சிறப்பாக அமைத்து கொடுத்துள்ள மாநகராட்சிக்கும், மேயருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடி மாவட்டம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் மாவட்டமாக இருந்து வருகிறது. உதாரணமாக, கபடி போட்டி, ஹாக்கி போட்டிகளில் உலக அளவில் நமது வீரர்கள் தேர்ச்சிப் பெற்று வருகின்றனர். மாநகர மக்களின் வசதிக்காகவும், விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காகவும் திறக்கப்பட்டுள்ளது. இதை அனைவரும் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு ரூ.500 மாத கட்டணம் என்று நிர்ணயம் செய்தாலும் செலுத்த முடியாமல் இருக்கும் திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு மாநகராட்சி அவர்களுக்கு சிறப்பு சலுகை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். உலக அளவில் நமது திறமைகளை விளையாட்டு வீரர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்று மனதார பாராட்டுகிறேன். இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முறையாக செய்யாத பணிகளை தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின் எல்லா பணிகளும் நல்லமுறையில் நடைபெறுகிறது. தூத்துக்குடியில் கூடுதலான சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு, ஸ்மார்ட் சிட்டி கட்டமைப்புகளை முறைப் படுத்தி மக்களுக்கு பலன்தரும் வகையில் செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு சிறப்பு நிதிகளும் வழங்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கனிமொழி எம்.பி. வழிகாட்டுதலின்படி இந்த மாநகராட்சி வளர்ச்சிபாதையில் பயணித்து வருகிறது. என்று கீதாஜீவன் பேசினார்.

மேயர் ஜெகன்பெரியசாமி பேசுகையில்: தமிழகத்தில் மற்ற மாநகராட்சிகளை காட்டிலும் இந்த மாநகராட்சியில் பல புதுமையான திட்டங்களை கனிமொழி எம்.பி வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டு வருகிறது. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இது போன்ற அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதை அனைத்துத் தரப்பினரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமீபத்தில் ஸ்டெம் பூங்கா திறக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதை பள்ளி மாணவ மாணவியர் உற்சாகத்துடன் கண்டு களித்து வருகின்றனர். எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வரும் பத்திரிகையாளர்கள், கவுன்சிலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன், என்று மேயர் ஜெகன்பெரியசாமி பேசினார்.

பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்: 'மாலத்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மீனவர்களை விடுவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக ஒன்றிய அமைச்சரை நேரில் சந்தித்து வலியுறுத்துவேன். தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. இதனை தடுக்க அண்டை நாடுகளுடன் ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என்றார்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாநகராட்சி செயற்பொறியாளர் பாஸ்கர், பொறியாளர் சரவணன், உதவி ஆணையர் சேகர், மண்டலத் தலைவர்கள் கலைச்செல்வி, நிர்மல் ராஜ், சுகாதார குழு தலைவர் சுரேஷ்குமார், பணிக்குழு தலைவர் கீதா முருகேசன், மாமன்ற உறுப்பினர்கள் ரிக்டா, எடின்டா, மும்தாஜ், வைதேகி, சுப்புலெட்சுமி, பவானி மார்ஷல், இசக்கி ராஜா, விஜயலெட்சுமி, மகேஸ்வரி, சந்திரபோஸ், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாவட்ட பிரதிநிதி ராஜ்குமார், பெருமாள்கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், சுகாதார ஆய்வாளர் ராஜசேகர், மாநகர மீனவரணி துணை அமைப்பாளர் ஆர்தர் மச்சாது, வட்டச் செயலாளர் சதீஷ்குமார், வட்ட பிரதிநிதி துரை மற்றும் கருணா, மணி, பிரபாகர், ஜோஸ்பர், லிங்கராஜா, பேச்சிமுத்து, ஆல்பர்ட், செய்தி மக்கள் தொடர்பு உதவி அலுவலர் முத்துகுமார், மேயரின் நேர்முக உதவியாளர் ரமேஷ், ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி, அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மேற்கு - கிழக்கு மாவட்டங்களில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், அக். 31-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-





கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி, 01.01.2024-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ளது. திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களிலுள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளிலும் 27.10.23 முதல் 09.12.23 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றம் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ள வாக்காளர் பட்டியலை பெற்றுச் சென்ற அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் செயலாளர்கள் உடனடியாக அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அளித்து, மேற்கண்டவாறு அறிவித்துள்ள சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் நாட்களில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) வாக்குச்சாவடி உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித்தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறும், இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) வாக்குச்சாவடி உறுப்பினர்கள் (BLCs) ஆகியோர் இந்த பணிகளில் முழுமையாக இருந்து நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுடன் (BLO) இணைந்து இப்பணிகளை கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திருப்பத்தூர், அக். 31 -

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் - ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக் கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்கள் அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் -வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வேலூர் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் மாணவர் அணி சார்பில் நடந்த பேச்சுப் போட்டியில் வென்ற பள்ளி மாணவிகளுக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.பரிசு வழங்கினார்.அருகில் துணை மேயர் எம். சுனில்குமார்,மாவட்ட மாணவர்அணிஅமைப்பாளர் பி.எம்.தேவராஜ், துணை அமைப்பாளர் அ.அரவிந்த், மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர்

# சு.முத்துசாமி சம்மந்தி வி.கே.தங்கவேல் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, அக். 31-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும்,வீட்டுவசதி மற்றும்நகர்ப்புறவளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமியின் மகன் ராஜாவின் மாமனார் கோபி மூலவாய்க்கால் வி.கே.தங்கவேல் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாருக்கு யசோதா என்கிற மனைவியும், கிருத்திகா பெரியநாயகி என்கிறமகளும்உள்ளனர்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்த மாநில, மாவட்ட,மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், அனைத்துக் கட்சிப் பிரமுகர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்குநேற்று(30.10.2023 -திங்கட்கிழமை)மதியம்3 மணியளவில் கோபி மூலவாய்க்காலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் 222வது நினைவு நாளை முன்னிட்டு மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு முன்னாள் எம்.பியும் மாநில மகளிரணி துணைச்செயலாளருமான திருமதி பவானி ராஜேந்திரன் தலைமையில் கழக நிர்வாகிகள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 116–வது பிறந்த நாளையொட்டி, மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2023) மதுரையில், உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். அமைச்சர் பெருமக்கள் மற்றும் பழ. நெடுமாறன் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.







## தேர்தல் அறிக்கைகள்

# “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்!”

■ நீரை.மகேந்திரன்



புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளும், புத்தாயிரமாண்டு நுழைவும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை உந்தித் தள்ளின. அந்த நேரத்தில் தமிழ்நாட்டின் ஆட்சியில் இருந்தது கலைஞர் என்பது, மாநிலத்தின் எதிர்காலத் திசையைத் தீர்மானிக்க நல்வாய்ப்பாக அமைந்தது. குறிப்பாக, அப்போது விரிவடைந்து கொண்டிருந்த புதிய பொருளாதாரக் கொள்கையை மிக வேகமாக எதிர்கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு இருந்தது.

1996-ஆம் ஆண்டு ஆட்சியின்போது, அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எல்லாம் ஆட்சிக்கு வந்ததும் நடைமுறைக்கு வந்தன. சொல்லாத பலவற்றையும் நிறைவேற்றினார் என்பது வேறு. வேலை வாய்ப்பு, தொழில்துறை, தொழிலாளர் நலன், வணிக வளர்ச்சி, கூட்டுறவுத் துறை எல்லாவற்றுக்கும் தனித்தனி கவனம் கொடுத்தது அப்போதைய ஆட்சி.

### மக்கள் அளித்த சான்று

“திட்டமிட்டு செயலாற்றுதல், திறமை மிக்க நிர்வாகம், அவசரப்படாமல் அதே நேரத்தில் விரைந்து முடிவெடுத்து பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பேராற்றல், இவை அனைத்தும் உங்கள் கழக ஆட்சிக்கு நீங்கள் அளித்த நற்சான்று” என்கிற உரையுடன் 1998-நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் கலைஞர்.

தி.மு.கழகத்தின் சாதனைகளைச் சொல்வதற்கு முன், அந்த இயக்கம் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் ஏன் அவசியமாக உள்ளது என்பதுடன் அந்த அறிக்கை தொடங்கியது.

“வலுவான சாம்ராஜ்யங்கள் பல, மொழிப் பாகுபாடுகளால் அழிந்திருக்கின்றன” என்று எச்சரிக்கும் அந்தத் தேர்தல் அறிக்கை, இந்தித் திணிப்பு விவகாரத்தில், அனைத்து மாநில மொழிகளையும் ஒன்றிய அரசின் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும் அல்லது உடனடியாகத் தமிழை மட்டுமாவது அறிவித்தல் வேண்டும் என வலியுறுத்தியது.

### ஒத்துழைப்பு

1998-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையும் பொருளாதாரச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து வலியுறுத்தியது. அதுவரை எந்த அரசியல் கட்சியும் தொடாத புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து, மிக நீண்ட விளக்கத்தினை அதில் பேசியிருந்தது தி.மு.க.

வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும், வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், விரைவானதும் அதிக அளவிலானதுமான பொருளாதார வளர்ச்சி (RAPID, HIGH, ECONOMIC GROWTH) என விரிவாகப் பேசியது. அதற்கு உத்தரவாதம் அளித்தால், தி.மு.க கழகம் தன்னால் இயன்ற ஒத்துழைப்பு அனைத்தையும் கொடுக்கும் எனப் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொள்வதைப் பார்க்க முடிகிறது.

1999-ஆம் ஆண்டில் நடைபெற்ற 13-வது நாடாளுமன்றத் தேர்தலின் போது வெளியிடப்பட்ட அறிக்கையும், பொருளாதாரக் கொள்கையின் இலக்குகளைத் தெளிவாகப் பேசின.

விலைவாசிக் குறைப்பு, நிதிப் பற்றாக்குறையைக் குறைத்தல், தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும் வேகமான வளர்ச்சி, சமுதாய நலன்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு, அதன் வாயிலாகப் பெருவாரியான கல்விக்கூடங்கள், தேவையான மருத்துவமனைகள், வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு இவைதான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கை எனக் கருதுகிறோம் என்று தெளிவாகப் பேசி இருந்தது.

2001-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கை, கழகத்தின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து எடுத்து வைத்தது. 1967 -ஆம் ஆண்டுமுதல் 71 வரை, 1971-ஆம் ஆண்டு முதல் 76 வரை, 1989-ஆம் ஆண்டு முதல் 91 வரை, 1996-ஆம் ஆண்டு முதல் 2001 வரை என ஒவ்வோர் ஆட்சியின்போதும் செயல்படுத்தியவற்றைப் பட்டியலிட்டனர்.

சமூக முன்னேற்றத்துக்கு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஒரு முகமை உருவாக்க வேண்டும் என்கிற ஒரு அக்கறையை 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் பார்க்க முடிகிறது.



**திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் கண்ணியமானது. நோக்கம் மட்டுமல்ல, அதனை அடைய வகுக்கப்படும் வழிமுறைகளும் கண்ணியமானவை.**

அப்போது, தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்கிற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டது. உலகமயமாக்கல் தத்துவம் மேலோங்கி வரும் இத்தருணத்தில் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை முன்வைத்துள்ளது.

### கதாநாயகனான அறிக்கை

2006-ஆம் ஆண்டுச் சட்டமன்றத் தேர்தல் அறிக்கை, அதுவரை இந்திய அரசியல் கட்சிகளிலேயே இல்லாத அளவுக்கு மிகப்பெரிய கவன ஈர்ப்பைக் குவித்தது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கலர் டிவி, கியாஸ் ஸ்டவ் என உயிரோட்டமான பல திட்டங்களை அந்த அறிக்கை முன் வைத்தது. ஆட்சி அமைக்கப்பட்ட பின், அவை எல்லாமே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என இன்றளவும் பேசப்பட்டு வருகின்றன.

2011-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கை இன்னும் கூடுதலாக சமூக நலத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் விதமாகப் பல அறிவிப்புகளைக் கொண்டிருந்தது.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை முழுவதுமாக விலையில்லாமல் வழங்குவது, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கம்ப்யூட்டர், ஏழை நோயாளிகளுக்கு இலவச டயாலிசிஸ் , அரசு ஊழியர்களின் பேறு கால விடுப்பினை மூன்று மாதங்களில் இருந்து நான்கு மாதங்களாக உயர்த்துவது எனப் பலவற்றைத் தொட்டுக்காட்டலாம்.

### அறிக்கைகளின் அரசியல்

தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கைகளைக் குறித்து நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு கருத்து, “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்பது. இந்த முழக்கத்தினை 1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் இருந்து, 2011-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை வரை உறுதி செய்ய முடியும்.

தமிழ்நாட்டில் நமது கண்ணுக்கு எதிரே உள்ள அத்தனை கட்டமைப்புகளிலும் கலைஞர் பெயரும், தி.மு.கழகத்தின் பெயரும் உள்ளது சாதாரணமாக அமைந்தது அல்ல. அதற்கான பெரும் போராட்டங்களே சமூக நீதி அரசியல் வரலாறாக உள்ளன.

‘தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றம்’, ‘மாற்றுத்திறனாளிகள் நல வாழ்வுத் திட்டம்’, ‘இலவச கான்கிரீட் வீடுகள்’, ‘இலவசக் கல்வி’, ‘வேளாண்மைப் பல்கலைக் கழகம்’, ‘சேலம் உருக்காலை’, நில உச்சவரம்பு’, ‘சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்’, ‘விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்’, ‘கான்கிரீட் சாலைகள்’, ‘மாணவர்களுக்கு இலவசப் பயண அட்டை’, ‘24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்’, ‘நமக்கு நாமே திட்டம்’, ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’, ‘கணினிக் கல்வி’, ‘சமத்துவபுரம்’, ‘சட்டப் பல்கலைக்கழகம்’, ‘மகளிர் ‘சிறு வணிகக் கடன்’, ‘உழவர் சந்தை’, ‘சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்’, ‘டைடல் பார்க்’ எனத் தி.மு.க அளித்த எண்ணற்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு, அவை தமிழ்நாட்டின் சமூக வாழ்க்கையை மாற்றி இருக்கின்றன.

### ஐந்து முழக்கம்

நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் கழகத்தின் தேர்தல் அறிக்கைகளில் தவறாமல் இடம்பெற்றவையாக ‘மாநில சுயாட்சி’, ‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு’, ‘மதச் சார்பின்மை’, ‘சமூகநீதி’, பொருளாதாரச் சீர்திருத்தம்’ இவற்றைப் பார்க்க முடிகிறது.

ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்புக்கு எதிராக, கொள்கை சாரத்துடன் குரல் கொடுக்கும் கட்சியாக, இந்திய அளவில் இன்றளவும் நீடித்திருப்பது தி.மு.கழகம் மட்டும்தான்.

“ஒன்றியத்தின் அதிகாரக் குவிப்பு, கூட்டாட்சிக் கொள்கையிலும், ஜனநாயகத் தத்துவத்திலும் நம்பிக்கை கொண்டுள்ளவர்களின் பொறுமையைச் சோதிப்பதாக இருக்கிறது என்றும், மாநில சுயாட்சிக்கு வழி செய்யும் வகையில், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்” எனத் தொடர்ச்சியாகத் தேர்தல் அறிக்கைகள் வலியுறுத்தி வந்துள்ளன.

“மதவெறிக் காரணமாகப் பிற மதச் சகோதரர் எவர்க்காவது தீங்கு ஒன்று வருமானால், தி.மு. கழகம் பொங்கி எழுந்து அவர்களுக்குத் துணை நின்று காப்பாற்ற இமையளவும் தயங்காது, தயங்காது என்ற உறுதிமொழியையும் அளிக்கிறோம்” என்றது.

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் கண்ணியமானது. நோக்கம் மட்டுமல்ல, அதனை அடைய வகுக்கப்படும் வழிமுறைகளும் கண்ணியமானவைகளே. அமைதியான சட்ட வரம்புக்கு உட்பட்ட, நாகரிகமான முறையில் பணியாற்றுவதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்.

அரசியல் துறையில் மட்டுமல்ல, சமுதாயத் துறையிலும் சாதி சமய வகுப்புப் பேதங்கள் ஒழிக்கப்பட்டுச் சமுதாயத்தைத் திருத்தி புதுப்பிக்கப்பட வேண்டும் என்று மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறோம் என கலைஞர் தனது வாக்குறுதிகளில் அறிவிக்கிறார். இந்தக் கடப்பாட்டில் தி.மு.கழகம் என்றறைக்கும் உறுதி கொண்டு நிற்கும்.

●

## திராவிட இயக்க இதழ்கள் - ‘கண்ணியம்’



‘அன்று குலோத்துங்கனுக்காக, ‘கலிங்கத்துப் பரணி’ பாடினார் செயங்கொண்டார். இன்று செயங்கொண்டத்தில் குலோத்துங்கன் தமிழ்ப் பரணி பாடுகிறார். எழுத்துத் துறையில் நாளை ஒரு வேந்தனாகத் திகழ்வார்’ என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட தி.மு.க. தொழிற்சங்கவாதி ஆ.கோ. குலோத்துங்கன் அவர்களால் நடத்தப்பட்ட இதழ் **‘கண்ணியம்’**.

முகப்பு அட்டையில் **‘சமூகக் கலை இலக்கியத் திங்களிதழ்’** என்ற பிரகடனத்தோடு 1970-ஆம் ஆண்டு ஜூன் 10 அன்று இந்த இதழ் தொடங்கப்பட்டுச் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவந்தது. தமிழ், தமிழர் பெருமை சார்ந்த படைப்புகள் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

ஒவ்வோர் எழுத்தாளருக்கும் இலட்சியங்கள், எண்ணங்கள், கொள்கைகள் எனப் பரந்துபட்ட பார்வை இருக்கும். ஒவ்வோர் எழுத்தாளரும் ஏதோ ஒரு குறிக்கோளுடன் எழுதுகிறார்கள். அவ்வாறு எழுதும் எழுத்தாளர்களை 1990-ஆம் ஆண்டு முதல் ‘நான் ஏன் எழுதுகிறேன்?’ என்ற தலைப்பில் எழுத வைத்து, எழுத்தாளர்களின் எண்ணக் கருத்துக்களைத் தொடர்ந்து பல இதழ்களில் பதிவு செய்தது இந்த இதழின் மிகப்பெரிய சாதனை. அந்த எழுத்தாளர்களின் பேட்டிகள் தொகுக்கப்பட்டு 20 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

## :.ப்ளாஷ்பேக்





சேக் அப்துல்லா சாகுல்

### பிரச்சாரத்தில் பாராட்டு!

என் தந்தை க.சாகுல் அவர்கள், இளைஞர் அணி தொடங்கப்பட்டதிலிருந்து தீவிரமாகச் செயல்பட்டு, போடி நகர இளைஞர் அணி அமைப்பாளராக சில காலம் பொறுப்பு வகித்தார். பின்னர் தலைமைக் கழகத்தால் போடி நகரச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. 2005-ஆம் ஆண்டு தளபதி அவர்கள் அடுத்தாண்டு நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, போடிக்கு வருகை தந்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இளைஞர் அணியிலிருந்து தலைமைக் கழகப் பொறுப்பை வகித்து வந்த என் தந்தையைத் தனிப்பட்ட முறையில் பாராட்டி, தளபதி அவர்கள் பேசியதை 8-ஆம் வகுப்பு படிக்கும் சிறுவனாகக் கேட்கும் வாய்ப்பும் எனக்கு வாய்த்தது. தனிப்பட்ட முறையில் எனக்குப் பெருமையூட்டும் புகைப்படமாக இதைக் குறிப்பிடுவேன்.

**-சேக் அப்துல்லா சாகுல், போடி நகரம், மாணவர் அணி துணை அமைப்பாளர், தேனி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மக்கள் நம் பின்னால்!

**1947-ஆம் ஆண்டு, மே மாதம் சென்னை, மயிலாப்பூர் திராவிட இளைஞர் கழக ஆண்டு விழாவில் பேசிய தந்தை பெரியார், கழகக் கட்டுப்பாடுகள் குறித்தும் அணுகுமுறை குறித்தும் விளக்கினார். “நம்மைப் பொறுத்தவரை நம் பின்னாலே மக்கள் வர வேண்டுமே தவிர, பாமர மக்கள் பின்னாலே ஓடுவது இல்லை. கல்லடி பட்டாலும் சரி, வெற்றி அடைந்தாலும் சரி, நமக்குப் பட்டதைச் சொல்லியே தீருவோம்”.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 286




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131